110

No. 20.

THE ORIENT प्राची பிராசீ



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 JUN 1913
MADRAS.

புஸ்தகம் 3.] விரோதிக்ருது௵ [ஸஞ்சிகை 4.

ஸ்ரீ வால்மீகி மஹாரிஷியால் சொல்லப்பட்டபடி

# ஸ்ரீமத் ராமாயணம்

தமிழ் வசன காவியம்.

## ஆரண்ய காண்டம்.

முதல் பதிப்பு.

ACL-TNAL
01755

சென்னை:

எல். வி. இராமசந்திர அய்யரால்

பதிப்பிக்கப்பெற்றது.

PRINTED AT THE ORIENTAL PRESS, MADRAS.

1911.

[*Copy Right Registered.*]

கொள்ளாமலிருப்பது போல இராவணனும் ஒப்புக்கொள்ள வில்லை. தனக்கு இதம் கூறிய மாரீசன் மேல் கோபங் கொண்டு அவனைப் பார்த்து இராவணன் சொல்லுகிறான். மாரீசா! நீ பயனற்ற வார்த்தைகளைச் சொன்னாய். அவைகள் உவர் நிலத்தில் விதைத்த விதைகளைப் போலப் பயன்படா. பாபாத்மாவும், மனிதனுமாகிய இராமனிடத்தில் நான் சண்டை செய்யக் கூடாதென்று என்னைத் தடுக்க உன்னால் முடியாது. அந்த இராமன் சிநேகிதர்களையும், இராஜ்யத்தையும் மாதா பிதாக்களையும் விட்டு, ஒரு பெண்ணினுடைய பயனற்ற வார்த்தையைக் கேட்டு, அந்த க்ஷணத்திலேயே வனத்துக்கு வந்துவிட்டான். அப்படிப்பட்டவன் ஒரு பெரியவனா? யுத்தத்தில் கரனைக் கொன்ற அந்த இராமனுடைய பிராணபத மனைவியான சீதையை உனக்கு எதிரிலேயே நான் அபகரிக்க வேண்டும். என் மனதில் உறுதியாய் நிச்சயம் செய்து கொண்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை மாற்றுகிறதற்கு இந்திரன் முதலிய தேவர்களாலும், அசுரர்களாலும் முடியாது.

8—13. இந்த விஷயத்தில் உயர்வு தாழ்வைச் சொல் என்றாவது, உபாய அபாயங்களைச் சொல் என்றாவது கேட்டால் நீ சொல்ல வேண்டியதே. நான் அப்படி உன்னிடம் கேட்கவில்லை. இராஜனுடைய நன்மையை விரும்புகிற புத்திமானான மந்திரி அரசன் கேட்டபோது யோசித்து அவனுக்கு பிரியமானதையும், இதமாயுள்ளதையும், நன்மையானதையும் மெதுவான வசனங்களாலே வணக்கமாய்ச் சொல்ல வேண்டும். மாரீசா! நீ எனக்கு இதமானதென்று கருதி, அவமானமானதைச் சொன்னாய். மானமுள்ளவர்கள் கௌரதைக்குறைவான அந்த வார்த்தைகளை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மஹா பலமுள்ள தைரியசாலியான அரசன் அக்கினியின் குணமான வெம்மையையும், இந்திரனுடைய குணமான விக்கிரமத்தையும், சந்திரன் குணமான குளிர்ச்சியையும், வருணன் குணமான பிரசன்னத்தையும், எமனுடைய குணமான தண்டனையையும் உடையவனாயிருக்கிறான். ஆகையினால் கஷ்டகாலத்தில் அரசர்களைப் பூசித்துக் கௌரவிக்க வேண்டும். நீ தர்ம சொரூபத்தை அறியாமல் மோகத்தினாலே, உன்னிடம் வந்த என்னைத் தடுக்கத் தக்க வார்த்தைகளைச் சொல்லக் கூடாது. மாரீசா! சீதாபஹரண விஷயத்தில் நன்மையையாவது, யுக்தாயுக்தங்களை

யாவது உன்னைக் கேட்கவில்லை. ஒப்பற்ற பராக்கிரமமுள்ளவனே! நான் இப்போது உனக்குச் சொன்னது என்னவெனில் பெரிய காரியத்தில் எனக்கு உதவி செய்ய வேண்டும். எனக்கு உபகாரமாக நீ செய்ய வேண்டிய காரியத்தைச் சொல்லுகிறேன் கேள்.

**17—22.** மாரீசா நீ வெள்ளைப் புள்ளிகளை யுடைய சொர்ணமான் வடிவமாகி, இராமனுடைய ஆச்சிரமத்துக்குப் போய்ச், சீதை எதிரில் உலாவிக் கொண்டிரு. அவள் உன்னைப் பிடிக்க வரும்போது ஆசையை உண்டாக்கி உன் இஷ்டம் போலத் திரி. அப்போது சீதை, இச்சைப்படி உலாவுகிற, அழகிய மாயமான் வடிவங் கொண்ட உன்னைப் பிடித்துத் தனக்குத் தரும்படி இராமனைக் கேட்பாள். அப்போது இராமன் உன்னைப் பின் தொடர்ந்து கொஞ்ச தூரம் போனவுடனே, ஏ சீதா ! ஏ இலக்ஷ்மணா! என்று இராமன் கூப்பிடுகிறது போலக் கூப்பிடு. அப்போது சீதை பயந்து, இராமனைப் போய்ப் பார்த்து வரும்படி இலட்சுமணனை அனுப்புவாள். அப்படி இராமலக்ஷ்மணர்கள் தூரத்தில் போனதும், தேவேந்திரன் இந்திராணியைத் தூக்கிக் கொண்டு போவது போல நான் சீதையைத் தூக்கிக் கொண்டு போவேன். மாரீசா ! இந்தக் காரியத்தை இவ்வாறு நிறைவேற்றி விட்டுப் பின் உன் இஷ்டம் போலப் போய் விடு. நீ இந்தக் காரியத்தை நிறைவேற்றி வைப்பாயானல் என் இராஜ்யத்தில் பாதி உனக்குக் கொடுப்பேன். இதற்காக நீ நல்ல வழியிலே நட. அழகான மான் ரூபம் எடுத்துக்கொண்டு போ. நான் தேரிலேறிக்கொண்டு உன் பின்னல் வருகிறேன். சண்டை செய்யாமல் இராமனை வஞ்சித்துச் சீதையை எடுத்துக்கொண்டு என் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு, பிறகு உன் கூடச் சேர்ந்து இலங்கைக்கு வருவேன். மாரீசா ! இப்போது நீ இந்தக் காரியத்தைச் செய்யாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன். உன்னை வருத்தப் படுத்தியாவது இந்தக் காரியத்தைச் செய்து கொள்வேன். அரசனுக்குப் பிரதிகூலமாய் இருக்கிறவன் ஒருபோதும் சுகம் அடையமாட்டான். இராமனிடத்தில் போனல் மரணம் வருமோ என்று சந்தேகப்படுகிறாய். எனக்கு விரோதம் பண்ணினல் இப்பொழுதே நீ சாவாய். ஆகையால் இதை நன்றாய் யோசித்து, எது உனக்கு நன்மையோ அதைச் செய் என்று இராவணன் மாரீசனிடம் சொன்னான்.

## 41-வது சருக்கம்.

மாரீசன் இராவணனை நிந்தித்தல்.

1—5. இராவணன் மாரீசனுக்குப் பிரிய மில்லாததைச் செய்யும்படி உத்தரவு கொடுக்க மாரீசன் அவனைப் பார்த்துச் சொல்லுகிறான். இராட்சத இராஜனே! உனக்கும், உன் பிள்ளைகளுக்கும் உன் மந்திரிகளுக்கும் நாசத்தை உண்டாக்குகிறதான இந்தக் காரியத்தைச் செய்யும்படி உனக்குப் போதித்த பாவி எவன்? நீ சுகமாய் வாழ்கிறதைப் பார்க்கச் சகியாத பாவி யார்? உனக்கு நீ மரணத்தைத் தேடிக்கொள்ளும் வழியைச் சொன்னவன் எவன்? பலஈனர்களான அரக்கர்களே உனக்குச் சத்துரு. இது உண்மை. நீ பலவானிடத்தில் அகப்பட்டுக்கொண்டு சாகிறதைப் பார்க்க விரும்புகிறவன் யார்? உனக்கு இந்த அபாயத்தைச் செய்யக் கருதி இந்தத் துர்ப் புத்தியை உனக்குச் சொன்னவன் யார்?

10—14. ஜெயம் அடைகிறவர்களுக்குள் சிறந்தவனே! தர்மம் ஜயம் இரண்டும் அரசனாலேயே நிலைபெற வேண்டும். ஆகையால், ஆபத்து வந்த காலத்தில் மந்திரிகள் அவனைக் காப்பாற்ற வேண்டும். நிசாசரா! இரக்க மில்லாத அரசனும், ஜனங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக நடக்கிற அரசனும், ஜிதேந்திரியன் அல்லாத அரசனும் இராஜ்யத்தை ஆளத் தகாதவர்கள். சாரதித் தொழில் தெரியாத சாரதியால் ஓட்டப்படுகிற வேகமுள்ள குதிரைகள் மேடு பள்ளமான இடங்களில் வேகமாய் ஓடி, யிடறிச் சாரதியுடன் கூட விழுந்து கெடுகிறது போலக் கெட்ட யோசனை சொன்ன மந்திரிகள், தன் இஷ்டம்போல நடக்கிற அரசனுடன் சீக்கிரத்தில் அழிவார்கள். உலகத்திலே அநேக சாதுக்கள், தாம் யோக்கியர்களாயிருந்தாலும், தர்ம மார்க்கத்தில் நடக்கிறவர்களா யிருந்தாலும், இதரர்களுடைய கெட்ட நடத்தைகளால் பரிவாரத்துடன் நசிக்கிறார்கள். இராவணா! ஜனங்களுக்குப் பிரியமில்லாதவனும், துஷ்டனுமான அரசனாலே பரிபாலிக்கப்படுகிற ஜனங்கள் ஒருபோதும் சுகப்படமாட்டார்கள்.

15—20. இராவணா! கெட்ட புத்தியுள்ளவனும், இந்திரியங்களை ஜயிக்காதவனும், கொடியவனுமான உன்னுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கிற அரக்கர்கள் எல்லாரும் தப்பாமல் மடிந்து

போவார்கள். காகதாளீய நியாயத்தினாலே எனக்குக் கூட கொடிய கஷ்டம் வரும். இதில் சந்தேகமே யில்லை. நீ பரிவாரத்துடன் தப்பாமல் மடிந்து போவாய். நீயே வேண்டுமென்று இப்படிப் பட்ட ஆபத்தை வருவித்துக் கொள்கிறதைக் குறித்துத் துக்கப் பட வேண்டி யிருக்கிறது. இராமன் என்னைக் கொன்றுவிட்டுச் சீச்கிரத்தில் உன்னையும் கொல்வான். நான் இந்த இராமனால் கொல்லப்பட்டுக் கிருதார்த்தனாவேன். உன்னால் சாவதை விடப் பரம்பொருளாகிய இராமனால் இறப்பது அநேக விதத்திலும் மேலானது. இராமனிடத்திக்கு நான் போனவுடனே இறந்துபோய் விட்டேன் என்று எண்ணிக் கொள். நீயும் சீதையை அபகரித்து, புத்திர மித்திர பந்து ஜனங்களுடன் சாவாயென்று எண்ணு. நீ யென்னுடன் போய்ச் சீதையை எடுத்துக்கொண்டால் நீயும் இருக்கமாட்டாய். நானும் இருக்கமாட்டேன். இந்த இலங்கையும் இராது. இராட்சதர்களும் இருக்கமாட்டார்கள். இராவணா! நீ மேன்மை யடைவதைக் குறித்து, வருந்துகிறேன். நீ என் வார்த்தையைக் கேளாமலிருக்கிறாய். உலகத்தில் சாவுகிட்டின அற்பாயுசுள்ள மனிதர்கள் தங்களுக்கு இதத்தைச்சொல்லுகிற சிநேகிதர்களுடைய வார்த்தைகளைக் கேட்கமாட்டார்கள் என்று மாரீசன் இராவணனுக்குச் சொன்னான்.

---

## 42-ம் சருக்கம்.

மாரீசன் மாய மானாக வருகிறது.

1—5. மாரீசன் இராவணனுக்கு இப்படிச் சொல்லவும் அவன் கேளாமையால் வருந்தி, அவனுக்குப் பயந்து, அப்படியே போவோம். இராவணா! வதைக்க நினைத்து ஆயுதங்களையும் வில் அம்புகளையும் தரித்துக் கொண்டிருக்கிற இராமனுக்கு எதிரில் போகிறேன். ஆனால் என் பிராணன் போய்விட்டதே. இராமனுக்கு எதிர்ப்படுகிறவர்கள் பிராணனுடன் மீண்டு போகிறவர்களல்ல. எமதண்டத்தால் அடிப்பட்ட உனக்குச் சமமானவன் இராமனைத் தவிர வேறொருவருமில்லை. நீ இப்படி முரட்டுப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு இருக்கிறபடியால் நான் இனி என்ன செய்வேன்? இதோ போகிறேன். இராவணா! உனக்கு மேன்மை யுண்டாகட்டும் என்று சொன்னான்.

6—13. இராவணன் மாரீசனைப் பார்த்து இப்படிப்பட்ட சௌரியமான பேச்சுகளை என் எண்ணத்துக்கு ஒப்பவே சொன்னாய். நீ இப்பொழுது மாரீசனாய் விட்டாய். இதற்கு முன்னால் யாரோ ஒரு இராட்சதனைப் போலிருந்தாய். இரத்தினாபரணங்களாலே அலங்கரிகப்பட்டிருக்கிறதும், பிசாசுகளைப் போல முகமுள்ளதுமான குதிரை கட்டிய இந்தத் தேரில் என் கூட ஏறு. நீ சீதையை ஏமாற்றிவிட்டுப் பின் உனக்குப் பிரியமான இடத்துக்குப் போ. ஜன சஞ்சாரமில்லாத அந்த வனத்திலிருக்கிற சீதையைப் பலாத்காரமாக நான் எடுத்துக்கொண்டு போய் விடுகிறேன் என்று இராவணன் மாரீசனைத் தட்டிக் கொடுத்தான். அதன் பின் புஷ்பகவிமானம் போன்ற தேரில் இராவணன் மாரீசன் இருவரும் ஏறிக்கொண்டு, அந்த ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்டு வேகமாய்ப் போய் வழியிலிருக்கிற மலைகள், வனங்கள், ஆறுகள், தேசங்கள், நகரங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே போய்த் தண்டகாரணியத்தை அடைந்தார்கள். அங்கே இராமருடைய ஆச்சிரமத்தைக் கண்டார்கள். தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தேரினின்று கீழே யிறங்கினார்கள். அப்போது இராவணன் மாரீசன் கைகளைப் பிடித்துக்கொண்டு, அநுகூலமான சிநேகிதனே! வாழை மரங்களால் நிறைந்திருக்கிற இதுதானே இராமாச்சிரமம்? நாம் இவ்விடத்துக்கு எந்தக் காரியத்தை உத்தேசித்து வந்தோமோ அந்தக் காரியத்தைத் தவக்கமில்லாமல் செய் என்று சொன்னான்.

14—29. அந்த மாரீசன் இராவணன் சொன்னதைக் கேட்டுப், பார்க்க ரம்மியமான மான் வடிவங்கொண்டு இராமருடைய ஆச்சிரமத்தின் கிட்ட உலாவிக்கொண்டு இருந்தான். மான் வடிவம் கொண்ட மாரீசன் இந்திர நீலத்தைப் போலக் கொம்பு நுனியும், கொஞ்ச பாகம் வெள்ளையாயும், கொஞ்ச பாகம் செந்தாமரை பூவைப் போலச் சிவப்பாயும், நீலோத்பலம் போன்ற காந்தியுள்ள முகமும், இந்திர நீலமணி போன்றதும், செங்கழுநீர் மலரைப் போன்றதுமான காதுகளும், மெதுவான கழுத்தும், இந்திர நீல மணி துண்டுகளைப் போன்ற உதடுகளும், முல்லை சந்திரன் வயிரமணி இவைகளைப் போன்ற ஒளியுள்ள வயிறும், இலுப்பைப் பூவைப் போன்ற பக்கங்களும், தாமரை யிதழ் போன்ற மற்ற அவயங்களும், வைடூரிய மணி போன்ற தாடைகளும், மெல்லிய தொடைகளும், அழகிய சந்து பொருத்துக்களும், இந்திர தனுசு போன்ற வாலும்,

உடையவனும், எல்லா வர்ணங்களு முடையவனும் நவ ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டவன் போல விளங்கினன். ஒரு க்ஷணத்துக்குள் மேற் சொன்னபடி அவயவங்களுள்ளதும், காந்தியுள்ளதும் பார்க்க இன்பமானதும், பலவர்ணங்களையுடையதுமான மான் வடிவங்கொண்டு, அந்த வனத்தையும இராமாச்சிரமத்தையும் பிரகாசிப்பித்துக்கொண்டு, சீதையை வஞ்சிப்பதற்காக அங்கங்கே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். வெள்ளை வர்ணமுள்ள புள்ளிகளையுடையதும், பார்வைக்கு இன்பம் தருவதுமான மான் வடிவமாய்ச் செடிகளிலுள்ள துளிர்களைக் கடித்துத் தின்றுகொண்டு திரிந்தான். மாரீசன் கமல வர்ணமுள்ள முதுகை யுடைய மான் ரூபம்கொண்டு இராமாச்சிரமத்துக் கருகிலுள்ள கதலிவன கிருகத்தையும், வனங்களையும் கடந்து வந்து சீதை பார்க்கும்படியான இடத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அந்த மாரீசன் சிறந்த மான் ரூபம் தரித்து, அங்கே திரிந்து பின் வேறிடத்துக்குப் போய், மறுபடியும் அவ்விடத்துக்கு வந்து, மீண்டும் வேறிடங்களுக்குப் போய், ஒரு முகூர்த்த காலம் இருந்து மறுபடியும் அவ்விடத்துக்கு வேகமாய் ஓடிவந்தும் இப்படியாகப் போவதும் வருவதுமாகத் திரிந்து கொண்டிருந்தான். அந்த மாரீசன் மான் வடிவாய் அப்படித் திரிந்து ஒரு இடத்தில் சற்று நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தான். மறுபடியும் எழுந்திருந்து இராமாச்சிரமவாயிலில் வந்து, மான் கூட்டத்தோடு சேரப் பார்த்தான். அந்த மான்கள் எல்லாம் அவனைப் பின் தொடர்ந்தன. சீதை கண்களுக்கு எதிர்ப்பட வேண்டுமென்று கருதி, அவ்வாச்சிரமத்தில் சுற்றித் திரிந்தான். அந்த வனத்தில் சஞ்சரிக்கிற மான்கள் எல்லாம் மாரீசனுடைய விந்தையான மான் வடிவத்தைக் கண்டு, அவன் கிட்ட வந்து, மோந்து பார்த்து, இது மானல்ல. இராட்சதன் என்று தெரிந்து கொண்டு, பத்துத் திசைகளிலும் சிதறி ஓடின. அந்த மான் வேட்டையாட வேண்டுமென்கிற பிரியமிருந்தாலும், மாரீசன் தன் சொரூபத்தை மறைக்கவும், தனது சுயரூபம் தெரியாமலிருக்கும்படியும் கருதி அந்த மான்களைத் தின்னுமலிருந்தான்.

30—35. அந்தச் சமையத்தில் அழகான கண்களையுடைய சீதை பூ எடுப்பதற்காக அந்த மரங்களின் சமீபத்தில் வந்தாள். மது பானம் பண்ணினவர்களைப் போலச் சிவந்த கண்களையும், அழகிய முகத்தையும் உடைய அந்தச் சீதை புஷ்பங்களை யெடுத்

தும், கோங்கு, அசோகு, மா முதலிய மரங்களைப் பார்த்துக் கொண்டும் உலாவிக் கொண்டிருந்தாள். சிறிய பற்களையும், சிவந்த முகத்தையும் உடைய சீதை முத்து, இரத்தினம் போன்ற காந்தி பொருந்திய சரீரத்தை யுடையதும், வெள்ளியைப் போன்ற புள்ளிகளை யுடையதுமான அந்த மானைப் பார்த்து, வெகு ஆச்சரியத்துடன் கண்களைத் திறந்து பிரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். மாயமானுருவம் கொண்டு வந்திருக்கிற மாரீசன் இராமருடைய மனைவியான சீதையைப் பாரத்து, அந்த வனத்தைப் பிரகாசிப்பித்துக் கொண்டு, அவ்விடத்தில் உலாவித் திரிந்தான். எல்லா வகை இரத்தினங்களினுலும் அலங்கரிக்கப்பட்டிருப்பது போனுள்ளதும், இதற்கு முன்னுல் தான் ஒருபோதும் பாராததுமான அந்த மானைப் பார்த்துச் சீதை மிகவும் ஆச்சரியமடைந்தாள்.

---

## 43-வது சருக்கம்.

சீதை மாயமானைப் பிடித்துத்தர விரும்புதல்.

1—7. மிகுந்த புகழுள்ளவளும், பழுதற்ற அங்க லட்சணமுள்ளவளும், புடமிட்ட தங்கம்போன்ற ஒளி பொருந்தியவளுமான சீதை, புஷ்பங்களைக் கொய்து கொண்டு பொன், வெள்ளி இவைகளைப் போன்ற பக்கங்களை யுடைய அந்த மானை நன்ருய்ப் பார்த்து, மனங்களித்து, இராமரையும், ஆயுதங்களை அணிந்து கொண்டிருக்கிற இலட்சுமணரையும் அழைத்தாள். சீதை கூப்பிட்டவுடன் புருஷோத்தமர்களான இராம லட்சுமணர்கள் அங்கே வந்து அந்த மானைப் பார்த்தார்கள். இலட்சுமணர் அந்த மானைப் பார்த்ததும் சந்தேகப்பட்டு இராமரை நோக்கி, அண்ணு மாரீசன் என்று பேர் கொண்ட அரக்கனே இந்த மான் வடிவாக வந்திருக்கிருனென்று நான் எண்ணுகிறேன். பாபாத்மாவான அவன் காமரூபியாதலால் இப்படிப்பட்ட மான் வடிவ மெடுத்துக் கொண்டு வேட்டைக்கு வந்த இராஜ புத்திரனைக் கொன்ருன். புருஷோத்தமா! ஆகையால் இந்த மானும் மாரீசனுடைய மாயையே பிரகாசம் பொருந்திய கந்தர்வபுரம்போன்ற மானுருவமாக மாறி இருக்கிறது. லோகநாயகா! இராகவா! இரத்தினங்களைப் போலப் பல வர்ணமுள்ள இதைப் போன்ற மான் உலகத்தில்

கிடையாது. ஆகையால் இது மாயையே தவிர வேறல்ல. சந்தேகிக்கத் தக்கதே யென்றார்.

8—21. இப்படிச் சொன்ன இலட்சுமணருடைய வார்த்தையைக் கேட்ட சீதை புன்னகையுடன் தன் கணவனைப் பார்த்து, ஒப்பில்லாத இந்த மான் என் மனதைக் கவர்ந்து கொண்டது. மஹா பாகுவே! இந்த மானை எனக்குப் பிடித்துத் தாரும். இது நமக்கு விளையாட உதவும். நமது ஆச்சிரமத்துக்கு ஆனந்தத்தை தருவதும், அழகிய வடிவத்தை யுடையதும், என் மனசுக்கு விருப்ப முள்ளதுமான பெரிய மான்களும், சமர மான்களும், மரைகளும், புலிகள் முதலிய பல மிருகங்களும் இந்த ஆச்சிரமத்திலிருக்கின்றன வல்லவா? அவைகளில் இந்த மானைப் போலக் காந்தியுள்ளதும், தோற்ற முள்ளதும் அழகுள்ளதுமான மிருகம் ஒன்றுவது இல்லை. நான் பார்த்தது மில்லை. அந்த மான் பலவகை இரத்தினங்களினாலே அலங்கரிக்கப்பட்டது போலப் பல வர்ணங்களையும் உடையதாய், இரத்தினம் போன்ற புள்ளிகளை யுடையதாய்ப் பூர்ணமாவாசையில் உதிக்கிற பூர்ண சந்திரனைப் போலப் பிரகாசிக்கிறது. இந்த வனம் முழுவதையும் பிரகாசிப்பிக்கிறது. ஆ ஆ! இது எவ்வளவு அழகா யிருக்கிறது? இதன் சாயை எவ்வளவு இன்பமாயிருக்கிறது. இதனுடைய கண்ட தொனி எத்தனை சுகமாயிருக்கிறது! இதனுடைய சரீர அழகு என்னமா யிருக்கிறது. விநோதமான சரீரத்தை யுடையதாய் அழகு நிறைந்த இந்த மான் என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டது. இப்படிப்பட்ட அழகுள்ள இதனைக்கொல்லாமல் பிடித்துக்கொண்டு வந்தால் அற்புதமான இந்த மான் நம்முடன் விளையாடிக் கொண்டிருக்கும். நாம் வனவாசத்தை நிறைவேற்றி விட்டு, அயோத்திக்குப் போகும்போது இந்த மானைக் கூட அழைத்துக்கொண்டு போக வேண்டும். அங்கே நமது அந்தப்புரத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும். பரதர், இலட்சுமணர், நீர், நான். என் மாமியார்கள் ஆகிய எல்லாருக்கும் சந்தோஷத்தைத் தரும். இதில் சந்தேகமே யில்லை. இது உமது கையில் உயிரோடு அகப்பட்டால், அதன் தோல் எனக்குப் பயன்படும். நீர் கொன்று கொண்டுவந்தால் பொன் மயமான இதன் தோல் தர்ப்பாசனத்துக்குப் பதிலாக உபயோகப்படுத்துவேன். ஆகையால் எந்த விதத்திலும் அந்த மான் எனக்கு வேண்டியது அவசியம். ஆசை பெரிதாயிருக்கிறது. பார்ப்பதை எல்லாம் இப்படிக் கேட்பது சரி

யல்ல. ஆனாலும் இந்த மானைப் பார்த்த வுடனே பெரிய ஆசை உண்டாயிற்று என்று தன் பிரிய நாயகராகிய ஸ்ரீராமரிடம் சொன்னாள்.

22—39. இப்படிச் சீதை சொன்ன வசனங்களைக் கேட்ட ஸ்ரீராமர் அழகு நிறைந்த இந்த மானைப் பார்த்துச் சீதை அதன் மேல் ஆசை கொண்டாள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டு, இலட்சுமணரைப் பார்த்து, இலக்ஷ்மணா! சீதைக்கு இந்த மானிடத்திலுண்டா யிருக்கிற ஆசையைப் பார்? இவ்வளவு அழகான வடிவமுள்ள மிருகம் இந்த வனத்தில் எங்கும் கிடையாது. இந்திரனுக்குரிய நந்தவனத்திலும், குபேரனுடைய சைத்திரரதம் என்கிற உத்தியான வனத்திலும் இல்லை. இந்த உலகத்தில் எங்கேதான் இருக்கும்! நமது எதிரில் திரிகிறதும், அழகான உரோம வரிசைகளும், வெள்ளிப் புள்ளிகளுமுள்ள இந்த மானினது சரீரம் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கின்றது! இதன் முகத்திலிருந்து தோன்றுகிற ஒளி நெருப்பைப் போல ஜ்வலித்துக் கொண்டு, நாலு திக்குகளையும் பிரகாசிப்பித்துக்கொண்டு தளதள வென்று துலங்குகிறது. இந்திரநீல மணியைப் போலப் பிரகாசிக்கிற அழகிய சரீரமும், அழகான அவயவங்களு முடையதாய், வர்ணிக்க முடியாத அவ்வளவு அழகுள்ளதாய் இருக்கிற இந்த மானைப் பார்த்து எவன்தான் ஆச்சரியப்பட மாட்டான்! இலக்ஷ்மணா! வில் வீரர்களாகிய அரசர்கள் வேட்டை யாடுகிற போது மாம்சத்தின் நிமித்தமாகவாவது, வேடிக்கைக்காவது மிருகங்களை வதைப்பார்கள். ஒரு காரியத்தைச் செய்ய விரும்புகிறவன் அதை விசாரணை செய்யாமலே அத்தொழிலில் முயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்கிறவனை அர்த்த சாஸ்திர முணர்ந்தவனென்று சொல்லுகிறார்கள். சிறுத்த இடையையுடைய சீதை இந்த மான் தோல் மேல் என்னுடன்கூடி உட்கார விரும்புகிறாள். நிறைந்தரோமமுள்ள மானும், பிரியகி, பிரவேணி என்பவைகளும் இதைப் போல உண்பதற்குச் சிறந்ததல்ல வென்று கருதுகிறேன். காந்தியுள்ள இந்த மானும், வானத்தில் ஒளியுடன் விளங்குகிற மிருகசீர்ஷ நட்சத்திர ரூபமாயுள்ள மானும் ஆகிய இந்த இரண்டு மான்களுமே சிறந்தன வென்று எண்ணுகிறேன். ஆகையால் இலக்ஷ்மணா! நீ சொன்ன படியே மாரீசனே இந்த மாய வடிவங்கொண்டு வந்திருந்தாலும்

இதைத் தவருமல் கொல்ல வேண்டும். துஷ்டனும், புத்தி கெட்டவனுமான அந்த மாரீசன் இந்த வனத்தில் சஞ்சரித்து அநேக முனிவர்களை வதைத்தான். வேட்டையாட வந்த பெரிய அரசர்களைக் கூடக் கொன்றிருக்கிருன். ஆகையால் இதைத் தவருமல் கொல்ல வேண்டும்.

**40—50.** பெரிதான இந்த வனத்தில் வாதாபி என்று ஒரு பெரிய அரக்கன் இருந்தான். அவன் பிராமணர்களையும் ரிஷிகளையும் ஏமாற்றி, அவர்கள் வயிற்றுக்குள் புகுந்து, அவர்களுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டு வந்து அவர்களைக் கொல்வான். அந்த வாதாபி இப்படி வெகு காலம் நடந்து வந்துகொண்டிருந்தான். ஒரு நாள் மஹா மகிமையுள்ள அகஸ்திய முனிவரை ஆசையுடன் வரவழைத்து, அவருடைய வயிற்றுக்குள்ளும் ஆகாரமாகப் புகுந்து, போஜனம் முடிந்த பின் எப்போதும் போலத் தன் தொழிலைச் செய்ய ஆரம்பித்தான். அகஸ்தியர் வாதாபியை நோக்கி, வாதாபீ! உலகத்தில் இது பாவமென்று எண்ணுமல் உன் வல்லமையால் பெரியோர்களான பிராமணர்களைக் கொன்ருய் இவ்வளவு பாவியாகிய நீ பூமியில் இருப்பது கூடாது. ஆகையால் நீ என் வயிற்றில் ஜீரணமாய் விடு என்று சொல்லி, அவனைத் தமது வயிற்றுக்குள்ளேயே ஜீரணமாக்கிக் கொண்டார். தர்ம நெறி கடந்தவனும், இந்திரிய நிக்கிரக மில்லாதவனும், எல்லாருக்கும் மேலானவனுமான இந்த மாரீசன் வாதாபியைப் போல நாச மடைவான். வாதாபி அகஸ்தியரால் அழிந்தது போல, இந்த மரீசனும் என்னிடம் வந்த படியால் என்னுலேயே நாசமாவான். நீ கவசத்தை அணிந்துகொள். சீதையை ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொண்டிரு. இரகுநந்தன! நம்முடைய காரியங்களெல்லாம். இதனுலேயே நடக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் நாமிந்தச் சீதையை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும். நான் இந்த மானைப் பிடித்துக்கொண்டு வருவதா யிருந்தாலும் பிடித்துக்கொண்டு வருகிறேன். அல்லது கொல்ல வேண்டியதா யிருந்தாலும் கொன்று விட்டு வருகிறேன். இந்த மானிடத்துக்கு நான் இதோ போகிறேன். இந்த மான் மேல் சீதைக்கு இருக்கிற ஆசையைப் பார். இதன் தோல் நமக்கு வேண்டும். ஆகையால் இதைக் கொன்று இதன் தோலை மாத்திரம் கொண்டு வருகிறேன். இனி மேல் இந்த மான் இராது. நீ இந்த ஆச்சிரமத்தையும் சீதையை

யும் ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும். நான் இந்த மானை ஒரே அம்பினாலே கொன்று அதன் தோலை எடுத்துக்கொண்டு வருகிறேன். இலட்சுமணா! நீ புத்திமானும், நீதி வந்தரும், புத்தியுள்ளவருமான ஜடாயுவைத் துணையாக வைத்துக் கொள். பத்துத் திக்குகளையும் பார்த்துக்கொண்டு, நிமிஷத்துக்கு நிமிஷம் எவ்விடத்தையும் பார்த்துக்கொண்டு, வீர முடையவனாய்ச் சீதையைக் காப்பாற்று என்று இலக்ஷ்மணரிடம் சொல்லி விட்டுப் பிரயாணமாய் விட்டார்.

---

## 44-வது சருக்கம்.

### இராமர் மாய மானைக் கொன்றது.

1—8. மிக்க காந்தியையும், மஹா மகிமையையும் உடைய இரகுநந்தனரான ஸ்ரீராமர், இப்படித் தம்பிக்குக் கட்டளை யிட்டுத் தங்கப் பிடிகளை யுடைய சார்ங்கம் என்கிற தமது சிறந்த வில்லைத் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். மான் வடிவமாக வந்திருக்கிற மாரீசன் வில்லுடன் புறப்பட்டு வருகிற ஸ்ரீராமரைப் பார்த்து வேகமாய்ப் போனான். மறுபடியும் கொஞ்ச நேரத்துக்குள் எதிர் வந்து தோன்றினான். அப்போது ஸ்ரீராமர் கதை முதலியவற்றைக் கட்டிக்கொண்டு, வில்லை கையிலே பிடித்துக்கொண்டு மான் இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார். அப்போது மாரீசன் மான் வடிவமாய் எதிரில் ஜ்வலித்துக்கொண்டு காணப்பட்டான். அந்த மஹா வனத்தில் ஸ்ரீராமர் வில்லைத் தரித்துக்கொண்டு தன் மேல் பாணத்தை யெய்ய வருகிறதைப் பார்த்து அந்தப் பாணம் தன் மேல்படாதபடி தாண்டிப் போவான். ஸ்ரீராமர் சும்மா யிருக்கும் போது சமீபத்தில் வந்து கையில் அகப்படுகிறவனைப் போல அவருக்கு ஆசையை உண்டாக்குவான். பாணத்தை எடுத்த போது பயந்து ஓடி, ஆகாயத்தை முட்டும்படி குதித்துச் சரத் காலத்தில் மேகத்திற்கு இடையில் மறைந்து தோன்றுகிற சந்திரனைப் போல, வனம் முழுவதிலும் உலாவித் திரிந்தான். சில இடத்தில் காணப்படாமற் போவான். ஒரு நிமிஷத்துக்குள் எதிரில் தோன்றி நிற்பான். மறு நிமிஷத்தில் அவர் கண்ணுக் கெதிரில் தாண்டிக் குதித்து ஓடுவான். மான் வடிவம் கொண்ட மாரீசன் ஸ்ரீராமர் கண்

ணுக்குத் தோன்றுமலும், ஸ்ரீராமரை ஆச்சிரமத்திலிருந்து வெகு தூரம் அழைத்துக்கொண்டு போய் விட்டான்.

9—14. ஸ்ரீராமர் அந்த மானின் செய்கையைக் கண்டு கோபங் கொண்டார். அதனுடைய வடிவழகைக் கண்டு ஆசை கொண்டு பரவசமடைந்தார். அதன் பின் ஒரு மர நிழலில் களையாறும்படி நின்றார். மான் ரூபங்கொண்ட மாரீசன் ஸ்ரீராமரை இப்படி மயங்கச் செய்து, வனத்திலுள்ள மற்ற மான்களுடன் கூடி அவருக்குச் சமீபத்தில் வந்தான். ஸ்ரீராமர் அதைப் பிடிக்க வரும்போது முன் போல ஓட்டம் பிடித்தான். ஸ்ரீராமர் கொல்லுவாரோ என்று பயந்து கண்ணுக்குத் தோன்றும விருந்தான். கொஞ்ச நேரம் பொறுத்து மாரீசன் விருட்சங்களுக் கிடையில் காணப்பட்டான். ஊக்கமும் தைரியமுமுள்ளவரும், சத்துருக்களைக் கொல்லுகிறவருமான அந்த ஸ்ரீராமர் அதைக் கண்டு மிகக் கோபங்கொண்டு அதைக் கொல்லக் கருதினன். சூரிய கிரணங்களைப் போலப் பிரகாசிக்கிறதும், பிரமாவினலே யுண்டாக்கப்பட்டதுமான ஒரு திவ்யாஸ்திரத்தை எடுத்துத் தமது வில்லில் பூட்டிக், காது மட்டும் வலுவாய் இழுத்து எரிகிற சர்ப்பத்தைப் போல் விட்டார்.

15—21. அந்த இடிபோன்ற பாணம் மான்ரூபங்கொண்ட மாரீசனைத் தொடர்ந்து சென்று அவனுடைய மார்பைப் பிளந்தது. மாரீசன் பாணம் பட்டவுடன் பனை உயரம் எழும்பிக் குதித்து, அலறிக்கொண்டு பூமியில் விழுந்தான். அப்போது இராவணன் சொன்னது ஞாபகத்தில் வந்தது. எப்படிச் செய்தால் சீதை இலக்ஷ்மணரை அனுப்புவாள். இராவணன் சீதையை எடுத்துக் கொண்டு போவான் என்பதையும், அதைக் குறித்து இராவணன் சொன்னதை நினைத்துக் கொண்டான். ஸ்ரீராமருடைய ஒப்பற்ற பாணம் பட்டவுடனே மான் வடிவத்தை விட்டு, விந்திய மலையைப் போன்ற புயம் முதலிய அவயங்களுடனும், இரத்தினபரணங்களுடனும் கூடிய பெரிய ரூபமுள்ள இராட்சத வடிவம் கொண்டு, இராவணன் சொன்ன காலம் இதுதான் என்று நினைத்துக் கொண்டு, ஆ சீதா! ஆ இலட்சுமணு! என்று ஸ்ரீராமர் கூப்பிடுகிறது போலக் கூப்பிட்டுக் கொண்டு பிராணனை விட்டான்.

22—27. அப்படி மாரீசன் பயத்துடன் பூமியில் விழுந்து, இரத்தத்தில் நனைந்து, அங்குமிங்கும் புரண்டு கொண்டிருக்கிற

தைப் பார்த்து, இலட்சுமணர் சொன்ன வார்த்தையை நினைந்துச், சீதையின் மனதையும் யோசித்து, இது மாரீசனுடைய மாயை என்று இலட்சுமணன் முன்னேயே சொன்னான். அது அப்படியே ஆயிற்று. இப்பொழுது அரக்கனாகிய மாரீசன் என்னால் கொல்லப்பட்டு, ஆ சீதா! ஆ இலட்சுமணா! என்று என் குரல்போன்ற குரலுடன் கூவிக்கொண்டு ஜீவனை விட்டான். இந்தத் தொனியைக் கேட்ட சீதை என்ன ஆவாளோ! நீண்ட கைகளை யுடைய இலட்சுமணன் என்ன அவஸ்தைப் படுவானோ! என்று யோசித்து மயிர்க்குச் செறிந்து, பயத்துடன் மனம் கலங்கி, வேறொரு மானைக் கொன்று அந்த மாம்சத்தை எடுத்துக்கொண்டு ஜனஸ்தானத்தை நோக்கி வந்தார்.

---

## 45-வது சருக்கம்.

சீதை இலட்சுமணரை அனுப்புகிறது.

**1—4.** அந்த வனத்திலிருந்து கேழ்க்கப்பட்ட தன் கணவனுடைய குரல்போன்றுள்ள வசனத்தைக் கேட்டதும் சீதை இலட்சுமணரைப் பார்த்து இலட்சுமணா! நீ போ. ஸ்ரீராமர் சங்கதியைத் தெரிந்துகொள். அவர் மிகவும் நொந்தவரைப் போலக் கதறின சப்தம் காதில் கேட்டது. அது முதல் என் பிராணன் தள்ளாடுகிறது. என் மனம் நிலை கொள்ளவில்லை. சமீபத்தில் வனத்தில் அலறின உன் அண்ணனைக் காப்பாற்று. சிங்கங்களின் நடுவில் அகப்பட்ட ரிஷபத்தைப் போல அரக்கர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு, ஒத்தாசையை விரும்புகிற உன் தமையனிடம் சீக்கிரமாய்ப் போ என்று சொன்னாள். அப்படிச் சீதை சொல்லியும் இலக்ஷ்மணர் தமது தமையனாருடைய கட்டளையை நினைத்துக் கொண்டு, அப்படியே போகாமலிருந்தார்.

**5—8.** அதன் பின் சீதை, இலட்சுமணர் அப்படி யிருப்பதைப் பார்த்து. கவலை யடைந்து, இலட்சுமணா! நீ உன் அண்ணனிடத்தில் பிரியமுள்ளவனைப் போலப் பாசாங்கு செய்து மனதிலே பகையுள்ளவனா யிருக்கிறாய், அப்படி யில்லா விட்டால் இப்படிப் பட்ட கஷ்ட சமையத்தில் உன் தமையனுக்கு உதவி செய்யப் போ

காமலிருக்கமாட்டாய். நீ யெனக்காக ஸ்ரீராமரது அழிவை எதிர் பார்க்கிறுயா ? இப்படிப்பட்ட அபாய காலத்தில் ஸ்ரீராமரை அலட்சியம் செய்கிறுய். என் மேல் ஆசை கொண்டே உன் அண் ணனுக்கு உதவி செய்யப் போகாமலிருக்கிறுய். இது உண்மையே. ஸ்ரீராமர் இப்படி அவஸ்தைப்படுகிறது உனக்குச் சம்மதமென்று யோசிக்கிறேன். அண்ணனிடத்தில் உனக்குப் பிரியமே யில்லை. ஆகையினுலேயே மஹா காந்தியுள்ள ஸ்ரீராமரைப் பார்க்கப் போ காமல் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறுய். நீ எந்த ஸ்ரீரா மருக்காகச் காட்டுக்கு வந்தாயோ அந்த, ஸ்ரீராமருக்குப் பிராணு பாயம் நேரிடட் காலத்தில் நான் இங்கே யிருந்துகொண்டு செய்ய வேண்டிய காரியம் என்ன இருக்கிறது ? ஆகையால் நீ எனக்குத் துணையாக இங்கே யிருக்க வேண்டியதில்லை என்று கொடூர வசனங் களைச் சொன்னுள்.

9 — 19. இப்படிச் சொல்லிக் கண்ணீரினுலே நனைந்த மேனியை யுடையவளாய் ஒரு மானைப்போல அழுகிற சீதை யைப் பார்த்து, இலட்சுமணர் சொல்லுகிறுர். ஓ அம்மா! உமது நாயகர் பந்நகர், அசுரர், கந்தர்வர், தேவர், மனிதர், இராட்சதர் இவர்களில் ஒருவராலும் ஜயிக்கப் படாதவர். தேவேந்திரனுக்குச் சமானமான பராக்கிரமமுடைய உமது கணவரை, தேவர்கள், கொ டிய தானவர்கள், இராட்சதர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், மனிதர்கள், பட்சிகள், பிசாசர்கள், பன்னகர்கள், மிருகம் முதலா னவர்களில் எவரும் ஜயிக்க மாட்டார்கள். யுத்தத்திலே ஸ்ரீராமர் இவர்கள் எல்லாரையும் சங்கரிக்க வல்லவர். அந்த ஸ்ரீராமரைக் குறித்து நீ இப்படிச் சொல்லக் கூடாது.ஸ்ரீராமர் இல்லாதபோது, இந்தப் பெரிய வனத்தில் உன்னை ஒன்றியாக விட்டுப் போகக்கூடா து. மூன்று லோகத்திலுள்ளவர்களும, தேவேந்திராதி தேவர்க ளும் ஒன்றுகக் கூடி வந்து, தங்களுடைய தநுர்வித்தியா சாமார்த் திய மெல்லாம் காட்டினுலும், எப்படிப்பட்ட பலவந்தராயிருந்தா லும் ஸ்ரீராமரை எதிர்க்க முடியாது. நீர் வருத்தப்பட வேண்டாம். இந்தத் துக்கத்தை ஒழித்து விடும். உமது கணவர் அந்த மானைக் கொன்று விட்டுச் சீக்கிரம் வருவார். இந்தச் சத்தம் ஸ்ரீராமரு டைய தொனியல்ல. எவனே மாயையாலே இப்படிக் கூவி யிருக் கிறுன். அந்த மாரீசனுடைய மாயை கந்தர்வ நகரம் போன்றது

ஏ வைதேகி! அந்த மஹாத்மாவான ஸ்ரீராமர் உம்மை என் காவலில் வைத்துப் போயிருக்கிறார். புகழுடையவரே! அப்படிப்பட்ட உம்மை ஸ்ரீராமரிடம் ஒப்புவியாமல் தனிமையாக விட்டுப் போகிறது எனக்குத் தகாது. கரன் இறந்ததனாலே யிங்குள்ள இராட்சதர்களும் ஜனஸ்தானத்திலுள்ளவர்களும் நம்மிடம் பகை கொண்டிருக்கிறார்கள். ஓ வைதேகி! இந்த மஹா வனத்திலுள்ள அரக்கர்கள் எல்லாரும் பர இம்சையே விநோதத் தொழிலாக உடையவர்கள். நமக்குப் பயமுண்டாகும்படி பல விதமாகக் கூவுவார்கள். ஆகையால் நீர் அவர்களை இலட்சியம் பண்ண வேண்டாம் என்று பதில் சொன்னார்.

**22—27.** இலட்சுமணர் இப்படிச் சொல்லச் சீதை கோபித்துக் கண்கள் சிவந்து, உண்மையைச் சொல்லுகிற இலட்சுமணரைப் பார்த்துச் செய்யத் தகாத காரியத்தைச் செய்கிறவனே! காதகா! வம்சத்தை நாசம் பண்ணுகிறவனே! ஸ்ரீராமருக்குப் பெரிய ஆபத்து வருகிறது உனக்குச் சம்மதமா யிருக்குமென்றே எண்ணுகிறேன். ஆகையினாலேதான் ஸ்ரீராமருக்கு ஆபத்து வந்த போது, இப்படிப்பட்ட வார்த்தைகள் பேசுகிறாய். இலட்சுமணா! இப்படிப்பட்ட பாவ புத்தி உனக்கு உண்டானது ஒரு ஆச்சரியமல்ல. நீ வெளிக்கு நல்லவனைப் போல நடந்து, கொடியவனாயிருக்கிற உன்னிடத்தில் தயவென்பது இராது. நீ மஹா திருடன். நீ என்னை அனுபவிக்கக் கருதிக் கெட்ட புத்தியினாலே சுயமாகத்தானோ, பரதனுடைய ஏவுதலினாலோ ஒன்றியாய்த் தவித்திருக்கிற இராமனைத் தொடர்ந்து இருக்கிறாய். சுமித்திரை புத்திரனே! உன்னுடைய எண்ணமாவது பரதன் எண்ணமாவது நிறைவேறாது. நீலோத்பலம் போலத் திருமேனியை யுடையவரும், தாமரை போன்ற கண்களையுடைய வருமான ஸ்ரீராமரைக் கணவனாகப் பெற்ற நான் மற்றவரை யெப்படி விரும்புவேன்! இலட்சுமணா! நீ பார்த்துக்கொண்டிருக்கும் போதே உன்க்கெதிரில் நான் பிராணனை விட்டு விடுவேன். இதற்குச் சந்தேகமில்லை. ஸ்ரீராமரைப் பிரிந்த பின் நான் ஒரு க்ஷணமாவது உயிரோடு வாழ்ந்திருக்க மாட்டேன் என்று இலட்சுமணரைப் பார்த்து மஹா கோபத்தோடு கொரே வசனங்களைச் சொன்னாள்.

27—34. இப்படி நாணமற்றவளைப் போலச் சீதை சொன்ன வார்த்தைகளைக் கேட்ட ஜிதேந்திரியரான இலட்சுமணர் கைகளைக் குவித்துக் கொண்டு, சொல்லுகிறார். ஓ வைதேகி! நீ எனக்குத் தெய்வம்; பூஜிக்கத் தக்கவள்; ஆகையால் நான் உனக்குப் பதில் பேசக் கூடாது. இப்படிபட்ட அயோக்கியமான பேச்சுக்களைப் பேசுகிறது ஸ்திரீகளிடத்தில் ஆச்சரியமாகக் காணப்படாது. உலகத்திலுள்ள பெண்கள் எல்லாரிடத்திலு மிப்படிப்பட்ட நடத்தையே காணப்படுகிறது. ஸ்திரீகளுக்கு நியாயமில்லை; சபல சித்தமுடையவர்கள்; துஷ்டர்கள்; பகை யுண்டாக்குகிறவர்கள். ஜனக மஹா ராஜன் புத்திரியே! நீ சொன்ன வார்த்தைகளைப் பொறுக்க மாட்டேன். காய்ச்சின நாராசங்களைப் போல அச்சொற்கள் என் இரு செவிகளையும் துளைக்கின்றன. நியாவதியான என்னைப் பற்றி நீர் சொன்ன வார்த்தைகளை யெல்லாம் இந்த வன தேவதைகள் கேட்டுக் கொண்டு சாட்சியா யிருக்கக் கடவர்கள். தமையனுடைய கட்டளைப்படி யிருக்கிற என்னிடத்தில் சந்தேகப் படுகிறீர். சீ! அது கெட்டது. ஸ்திரீகள் எல்லாரும் துஷ்ட சுபாவமுடையவர்கள் என்று பெரியோர் சொல்லி யிருக்கிறார்கள். அழகிய முகத்தை யுடையவரே! ஸ்ரீராமர் இருக்கிற இடத்துக்குப் போகிறேன். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். விசாலமான கண்களை யுடையவரே! இந்த வனத்திலுள்ள தேவதைகள் எல்லாரும் உம்மைக் காப்பாற்றட்டும். அநேகமான கொடிய அபசகுனங்கள் காணப்படுகின்றன. நான் திரும்பி வந்து நீர் ஸ்ரீராமருடன் கூடி யிருப்பதை பார்ப்பேனோ பார்க்க மாட்டேனோ! எனக்குத் தெரியவில்லை என்று சொன்னார்.

35—40. ஜனகராஜ புத்திரியானவள் அழுதுகொண்டு, இலட்சுமணர் சொன்ன வசனங்களைக் கேட்டுக், கண்களில் நீரொழுக முன் சொன்னவைகளை விடக் கொடிய வசனங்களைச் சொல்லி இலட்சுமணா! நான் ஸ்ரீராமரை விட்டு ஒரு நிமிஷங்கூடத் தனித்திருக்க மாட்டேன். கோதாவரி நதியில் விழுவேன்; விஷத்தை உண்டாவது, நான்றுகொண்டாவது, மலைச் சிகரத்திலிருந்து விழுந்தாவது ஜீவனை மாய்த்துக் கொள்வேன். தீயில் விழுந்தாவது இறப்பேன். ஸ்ரீராமரைத் தவிர வேறு புருஷனுடைய காற்றுக்கூட என் மேல் படக் கூடாது. என்று கூறி இலட்சுமணரைத் தூஷித்துத்,

துக்கத்துடன் இரு கைகளாலும் வயிற்றில் அடித்துக் கொண்டாள். விசாலமான கண்களை யுடைய சீதை இப்படிக் கண்ணீர் விட்டழுகிறதை இலக்ஷ்மணர் பார்த்து அவளுக்குப் பல விதமாக ஆறுதல் சொன்னார். சீதை அதன் பின் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பிறகு இலட்சுமணர் சீதையை நமஸ்கரித்து, அஞ்சலியஸ்தராய் வணங்கித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஸ்ரீராமரிருக்கிற இடத்தை நோக்கிச் சென்றார்.

---

## 46-வது சருக்கம்.

இராவணன் சீதையினிடம் வருகிறது.

**1—5.** சீதை சொன்ன கோபமான வார்த்தைகளால் ஆக்கிரகம் கொண்டு ஸ்ரீராமரிருக்கிற இடத்தைத் தேடிக்கொண்டு போனார். அதன் பின் பத்துத் தலைகளுள்ள இராவணன் இலட்சுமணர் கூட வனம் போய் விட்டார். இதுதான் சமையம் என்று நினைத்துக், கபட சந்நியாசி ரூபம் கொண்டு, மெல்லிய காஷாய வஸ்திரம் தரித்துக்கொண்டு, சடை தரித்து, குடை பிடித்துக் கொண்டு, காலில் மிதியடி பூண்டு, இடது தோளில் ஒரு தண்டமணிந்து, கமண்டலமெடுத்துக் கொண்டு, இராம லட்சுமணர் இருவரும் இல்லாத சமையத்தில் சீதை யிருக்குமிடம் வந்து சேர்ந்தான். சந்திர சூரிய ரிருவருமில்லாத சந்தியாகால இருளைப் போலவும், சந்திரனை விட்டுப் பிரிந்து தனித்திருக்கிற ரோகிணியைப் பயங்கரமான இராகு பார்ப்பது போலவும் புண்ணியவதியான சீதையை இராவணன் கண்டான்.

**6—14.** பயங்கரமான கருமங்களைச் செய்கிற இராவணனைப் பார்த்து ஜனஸ்தானத்திலுள்ள மரங்களும் அசைய வில்லை. காற்றும் வீச வில்லை. இரத்தம் போலச் செவந்த கண்களாலே சீதையைப் பார்க்கிற இராவணனைக் கண்டு, வேகமாய் ஓடும் கோதாவரி நதியும் அவனுக்குப் பயந்து மெதுவாக ஓட ஆரம்பித்தது. இராமர் எப்போ அருகில் இல்லாமலிருப்பாரோ என்று காத்துக் கொண்டிருந்த இராவணன் இதுதான் சமையமென்று யோசித்து, அழகான சந்நியாசி வடிவத்தினால் புல்லால் மறைக்கப்பட்ட கிணற்

றைப் போலத் தன் ரூபத்தை மறைத்துக்கொண்டு சனி சித்திரையை அணுகுவது போல வைதேகியினிடம் வந்தான். அழகிய பற்களையும், உதட்டையும் உடையவளாயும், பூர்ண சந்திரனைப் போன்ற முகத்தை யுடையவளாயும் தாமரை யிதழ் போன்ற கண்களை யுடையவளாயும், பசிய பட்டாடை யணிந்தவளாயும், தன் கணவனைக் குறித்துத் துக்கப்பட்டு அழுது கொண்டிருப்பவளாயுமுள்ள ஸ்ரீராமரது தர்ம பத்தினியான வைதேகியை பர்ணசாலையில் பார்த்து அவளுக்கு எதிரில் வந்து நின்றான். நிசாசரனாகிய இராவணன் மகிழ்ச்சியுடன் அவள் சமீபத்தில் சென்றதும் மன்மத பாணங்களுக்கு இலக்கானான். வேதாத்தியயனம் செய்துகொண்டு சீதையை நோக்கி இவள் பூமியில் அவதரித்திருக்கிற இலட்சுமி தேவியே என்று நினைத்துக்கொண்டு அவளிடத்தில் பின் வருகிறபடி பேசத் தொடங்கினான்.

15—31. சொர்ணத்தைப்போலக் காந்தி வீசுகின்ற திருமேனியை யுடையவளே! பட்டுப் பீதாம்பரம் அணிந்துள்ளவளே! தாமரை போன்ற முகத்தையும், கண்களையும், கைகளையும் உடையவளாய்த், தாமரைமலர் மாலை யணிந்து அழகிற் சிறந்து விளங்குகிற நீ எங்குள்ளவள்? அழகான முகத்தையும், கீர்த்தியையும் உடையவளே! நாணம், அழகு, ஐசுவரியம், மகிமை இவைகளுடையவளாய் இந்த வனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற இரதியோ? ஐசுவரியம் அளிக்கும் இலட்சுமியோ? ஸ்ரீ தேவியோ? அப்ஸரஸா? இச்சைப்படி திரிகிற ரதியா? உன் பல் வரிசை பெரிதும் சிறிதுமில்லாமல் ஒத்து அழகா யிருக்கின்றது. கூரிய வாயும், மேன்மையாயும் வெண்மையாயும் இருக்கின்றது. உன்னுடைய கண்கள் விசாலமாயும், வட்டமாய் அழகாய்ச் செவ்வரி பரந்துள்ளன. உன் பிரஷ்டபாகம் பருத்து அழகாயும் சதைப் பற்றுள்ளதாயும் இருக்கிறது. உனது தொடைகள் யானைத் துதிக்கை போன்றனவாயும், உருண்டையாயும், சதைப் பற்றுள்ளனவாயும், பலமுள்ளனவாயும் இருக்கின்றன. ஸ்தனங்கள் பருத்து வட்டமா யிருக்கின்றன. இனியவைகளா யிருக்கின்றன. பருத்து நிமிர்ந்த சூசுகங்களையுடையனவா யிருக்கின்றன. மணிமாலைகளை யணிந்து அழகாய் விளங்குகின்றன. பனம் பழம் போல அழகு வாய்ந்துள்ளன. அழகிய புன்னகை யுடையாளே! சிறிய பல் வரிசை யுடையாளே!

விசாலமான கண்களை யுடையாளே! அழகுள்ளவளே! பெண்ணே நதியானது பிரவாகத்தினாலே கரைகளை அடித்துக்கொண்டு போகிறது போல உனது அழகிய ஸ்தனங்களினாலே என் மனசை கொண்டு போய் விட்டாய். விரல் பிடிக்குள் அடங்கும்படியான இடையினையும், ஒன்றோடொன்று ஒத்து இணங்கின ஸ்தனங்களையும் உடையவளா யிருக்கிறாய். தெய்வமாதா, கந்தர்வர், ஸ்திரீகள், யட்சஸ்திரீகள், கின்னரமாதர்கள் இவர்களிலும் இப்படிப் பட்ட அழகுள்ள பெண்கள் இல்லை. உன்னைப் போன்ற இவ்வளவு அழகுள்ள பெண்களை யிதற்கு முன்னால் நான் இந்தப் பூமியில் கண்டதே யில்லை. இந்தப் பூமியில் உன் அழகே சிறந்தது. உன் வடிவழகும், சிறப்பும், யௌவனமும், நீ வனத்தில் வாசம் பண்ணுகிறதும் என் மனதைக் கலக்குகிறது. நீ இவ்விடத்தை விட்டு வா. நீ இங்கே யிருப்பது தகாது. இது காம ரூபிகளான கொடிய அரக்கர்களுக்கு வாசஸ்தானமானது. அழகிய அரண்மனைகளை யுடைதும், வாழ்வுள்ளதுமான நகரங்களும், இன்பமான வாசனை நிறைந்த தோட்டங்களுமே நீ வசிக்கத் தகுந்தது. கறுத்த கண்களை யுடைய அழகிய பெண்ணே! நீ தரித்துக் கொண்டிருக்கிற பூமாலைகளும், நீ புசிக்கிற பதார்த்தங்களும், உன்னுடைய ரூபமும், உனது வஸ்திரமும் வெகு சிறப்பா யிருக்கின்றன. உனது நாயகனும் அப்படியே மேன்மையுள்ளவனா யிருப்பானென்று நினைக்கிறேன். அவனே தன்னியன். அழகிய முகமும் மிக்க புகழும் உடையவளே! நீ தேவஸ்திரீகளைப் போலவே காணப்படுகிறாய். வாயுதேவன் மனைவியோ? ருத்திரனுடைய பத்தினியோ? வசுவின் தேவியோ? யாருக்கு உரியவள்? இது கோரமான இராட்சதர்களுக்கு இருப்பிடமா யிருப்பதால் தேவர், கந்தர்வர், யட்சர் இவர்களில் ஒருவரும் இங்கே வரமாட்டார்கள். குரங்குகள், சிங்கங்கள், சிறுத்தைப் புலிகள், புலிகள், ஓநாய்கள், வேங்கைகள், யானைகள் முதலிய அநேக மிருகங்கள் வசிக்கின்றன. அவைகளைப் பார்த்து நீ எப்படிப் பயப்படாமலிருக்கிறாய்? அழகான முகத்தை உடையவளே! மதங்கொண்ட பயங்கரமான பெரிய யானைக் கூட்டங்களைப் பார்த்தும் பயப்படாமல் இந்த வனத்தில் வசிக்கிறாய்? அழகான பெண்ணே! நீ யார்? யாருடைய பத்தினி? என்னத்திற்காக இந்தப் பயங்கரமான வனத்தில் ஒன்றியாய்ச் சஞ்சரிக்கிறாய்? இந்தத் தண்டகாரணியத்தில் குரூரமான அரக்கர்

கள் வசிக்கிறார்கள். இந்தத் தண்டக வனத்தில் ஏன் தனியாக இருக்கிறாய்? என்னத்திற்காக இந்த வனத்தில் வந்திருக்கிறாய்? சொல் என்று இராவணன் கேட்டான்.

32—37. கபட சந்நியாசி வேஷம் கொண்ட துராத்மாவான இராவணன் கேட்கப், பதிவிரதையான சீதை அவனைத் தனக்கு நன்மையைச் சொல்லுகிற உண்மையான சந்நியாசி என்று நினைத்து, முதலில் அவனுக்கு ஆசனமிட்டுக், கால் கழுவி, பொய் வேஷம் பூண்ட அவனைப் பிராமணனென்று கருதி, அவனைப் பார்த்துச் சமைத்த போஜனம் சித்தமா யிருக்கின்றது என்று சொன்னாள். தண்டகமண்டல காஷாய வஸ்திரதாரியான பிராமண சந்நியாசி யென்று எண்ணிக் கொண்டிருக்கிற சீதையை வஞ்சிக்க நினைத்தே வந்திருக்கிற அவனைப் பார்த்து ஓ பிராமணோத்தமா! இதோ பீடமிருக்கிறது. இதன்மேல் உட்கார்ந்து கொள்ளும். இதோ கால் கழுவ நீர் இருக்கிறது. உங்களுக்காக இந்த வனத்திலுள்ள பதார்த்தங்களைக் கொண்டு சமைக்கப் பட்டது. இவைகளைப் புசியும் என்று பிராமணர்களை அழைப்பது போல அழைத்தாள். அப்போது இராவணன் கடின மனமுடையவனாய்ச் சீதையைத் தன் கைகளால் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போக நிச்சயித்தான். சீதை வெளியில் போயிருக்கிற அழகான தன் நாயகனையும், இலக்ஷ்மணரையும் எதிரில் சுற்றிப் பார்த்தும் ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் அவ்விடம் வரவில்லை.

---

## 47-ம் சருக்கம்.

இராவணன் தன் சுய ரூபம் கொள்வது.

1—2. இராவணன் இப்படிக் கேட்கச் சீதை இவர் பிராமண சந்நியாசி என்று நினைத்துப், பதில் சொல்வதற்கு முன்னே தன் மனதுக்குள் ஆலோசித்தாள். இவர் பிராமணர்; அதிதி; இவர் கேட்டவைகளுக்குப் பதில் சொல்லாவிட்டால் சபிப்பார் என்று நினைத்துக் கொண்டு அவனைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

3—13. பிராமணோத்தமா! நான் மிதிலாபுரியை ஆளுகிற மஹானுபாவரான ஜனக மஹா ராஜனுடைய புத்திரி. என் பேர்

சீதை என்று சொல்லுவார்கள். உமக்கு நன்மை யுண்டாகட்டும். நான் ஸ்ரீராமருடைய பத்தினி. இக்ஷ்வாகு மஹா ராஜாவின் அரண்மனையில் பன்னிரண்டு வருஷம் சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருந்தேன். பதின்மூன்ரும் வருஷம் தசரத மஹா ராஜா ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்காகத் தமது மந்திரிகளுடன் ஆலோசித்து நிச்சயித்தார். இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்யப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கையில், என் மாமியார்களில் கைகேயி என்னும் பேர் உள்ளவள் என் மாமனரிடம் போய், முன்னுல் நான் உமக்குச் செய்த உபகாரத்துக்காக நீர் தருவதாகச் சொன்ன இரண்டு வரங்களை இப்பொழுது கொடும். அவைகளில் ஒன்று ஸ்ரீராமரை வனத்துக்கு அனுப்ப வேண்டும்; மற்ருென்று பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும். இந்த இரண்டு வரங்களையும் எனக்குத் தரவேண்டும். இப்படி யில்லாமல் இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்தால் நான் புஜிக்க மாட்டேன். நீர் அருந்த மாட்டேன். நித்திரை செய்ய மாட்டேன். நான் ஸ்ரீப்போதே பிராணனை விடுவேன் என்று சொன்னுள். சொல் தவருதவரும், அரச சிரேஷ்டரும், தர்மாத்மாவுமான தசரதரை யாசித்தாள். அப்படிக் கொரமாகப் பேசின கைகேயியைச் சமாதானம் செய்யும்படி எவ்வளவோ சிறந்த வஸ்துக்களைக் கொடுத்து அவ்வரம் கேட்க வேண்டாம் என்று சொல்லியும், அவள் கேளாமல் தான் பிடித்த பிடியை விடாமல் உறுதியா யிருந்தாள், என் கணவன் பெருந் தன்மை யுள்ளவர். இருபத்தைந்து வயதுள்ளவர். நான் பிறந்து பதினெட்டு வருஷமாயின. என் நாயகர் ஸ்ரீராமரென்று லோகத்தில் பிரசித்தியானவர். நற்குணமுள்ளவர்; சத்தியத்தையே பேசுகிறவர்; கபட மற்றவர்; விசாலமான நேத்திரங்களை யுடையவர்; நீண்ட கைகளை யுடையவர்; எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புள்ளவர். அந்தப் பெருந் தன்மையுள்ள ஸ்ரீராமரை மறுக்க இஷ்டமில்லாதிருந்தும், கைகேயியைத் திருப்தி செய்யக் கருதித் தசரதர் ஸ்ரீராமருக்கு மகுடாபிஷேகம் செய்யவில்லை.

**14—24.** கைகேயி வரம் கேட்பதற்கு முன்னுலே தசரதர் ஸ்ரீராமரைப் பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்காக வரும்படி சொல்லி யிருந்தார். அப்படியே ஸ்ரீராமர் தம் பிதாவிடம் போன போது கைகேயி அவரைப் பார்த்து, இராகவா! பரதனுக்கு இரா

ஜ்யம் கொடுப்பதாகவும் நீ பதினுலு வருஷம் வனவாசம் செய்ய வேண்டிய தென்றும் உன் பிதா எனக்கு வரம் கொடுத்திருக்கிறார். ஆகையால் நீ வனத்துக்குப் போய் உன் பிதாவை அசத்தியமாகிற கடனில் நின்றும் விடுவி என்று சொன்னாள். தர்மத்தில் உறுதியா யுள்ளவரும், அச்சமில்லாதவருமான என் பர்த்தா அப்படியே யா கட்டும் என்று கூறினார். அப்படியே வனத்துக்கு வந்து விட்டார். பிராமணரே கொடுக்க வேண்டும், வாங்கக் கூடாது என்பதே இரா மருக்கு நிரந்தரமான நியமம். யுத்தத்தில் சத்துருக்களைச் சங்க ரிக்க வல்லவரானஸ்ரீ ராமருக்கு மாற்றாந்தாய் புத்திரரும், புருஷோ த்தமருமான இலக்ஷ்மணர் என்று பேருள்ளவருமானதம்பி பிரியாத சகாயமானவர். ஸ்ரீராமர் என்னுடன் வனத்துக்கு வந்தபோது சுவதர்மம் விடாமல் நடப்பவரும், விரத நியம முள்ளவருமான அந்த இலக்ஷ்மணர் வில்லை எடுத்துக்கொண்டு எங்கள் பிறகே வந்து விட்டார். தர்ம சீலரும், இந்திரிய நிக்கிரகமுள்ளவருமாய், இராஜ யத்தின் மேல் ஆசைவையாமல் விட்டு ஒழித்து, பிதா வாக்கிய பரி பாலனம் செய்வதையே பிரதானமாய் எண்ணி, ஜடை புனைந்து, ரிஷி வேஷந் தரித்துத், தம்பியையும் என்னையும் அழைத்துக் கொ ண்டு இந்தத் தண்டகாரணியத்துக்கு வந்தார். நாங்கள் மூவரும் கைகேயி நிமித்தமாக இராஜ்யத்தை விட்டு இந்த வனத்தில் தர் மத்தை நடத்திக் கொண்டு சஞ்சரிக்கிறோம். கொஞ்சநேரம் இங் கிருந்து களையாறும். கொஞ்ச நேரத்துக்குள் என் பர்த்தா மான், பன்றி முதலிய மிருக மாம்சங்களையும் கந்தமூல பலங்களையும் கொண்டு வருவார். துவிஜோத்தமரே! என் வரலாற்றைச் சொ ன்னேன். இனி உமது பேர், கோத்திரம், குலம் இவைகளைச் சொல்லும் நீர் ஒன்றியாக இந்த வனத்தில் ஏன் சஞ்சரிக்கிறீர்? உண்மையாகச் சொல்லும் என்று சீதை கேட்டாள்.

**24—31.** ஸ்ரீராமர் மனைவியான சீதை யிப்படிக் கேட்கப், பராக்கிரமமுள்ள இராட்சதனுகிய இராவணன் பதில் சொல்லுகி றான். ஓ சீதா! நான் தேவர், அசுரர், பன்னகர் முதலான எல் லா உலகத்தாரையும் நடுங்கச் செய்து கொண்டிருக்கிறவன். இரா வணன் என்று பேர் உள்ளவன். இராட்சதர்களுக்கு அரசன். அழகானவளே! சொர்ண சாயை யுடையவளும், பட்டு பீதாம்ப ரம் தரித்தவளுமான உன்னைக் கண்ட பிறகு என் பத்தினிகளை நான் அனுபவிப்பதே யில்லை. நான் அங்கங்கிருந்து கொண்டு வந்

திருக்கிற சுந்தரவதிகளான பெண்கள் எல்லாரிலும் நீ எனக்குப் பட்டு மகிஷியா யிரு. நாலு பக்கமும் சமுத்திரம் சூழ்ந்த இலங்காபுரி என்கிற என்னுடைய சிறந்த பட்டணம் சமுத்திரத்தின் நடுவில் இருக்கிறது. சீதா! அவ்விடத்தில் என்னுடன் கூடி வசித்திருக்கலாம் வா. நீ அங்கே வந்த பின் இந்த ஆரணியத்தில் வாசம் பண்ண விரும்ப மாட்டாய். ஓ சீதா! நீ எனக்கு மனைவியானால், சகலாபரணங்களையு மணிந்த ஐயாயிரம் வேலைக்காரிகள் உனக்குப் பணிவிடை செய்வார்கள் என்று இராவணன் சீதைக்குச் சொன்னான்.

**31—50.** குற்றமற்ற அங்கங்களை யுடைய ஜானகி அப்படிச் சொன்ன அரக்கனைச் சட்டை பண்ணாமல் சொல்லுகிறாள். பெரிய பர்வதம் போல அசைக்கப்படாதவரும், பெரிய சமுத்திரம் போலக் கலக்கமில்லாதவரும், இந்திரனைப் போலக் காந்தியுள்ளவருமான ஸ்ரீராமருக்குப் பத்தினியா யிருக்கிறேன். சகலசுப லட்சணங்களை யுடையவரும், ஆல மரத்தைப் போலப் பரிவாரங்கள் உள்ளவரும், சொன்ன சொல் தவறாதவரும், மஹா பராக்கிரம சாலியானவருமான ஸ்ரீராமருடைய தர்ம பத்தினியா யிருப்பவள். நான் பதிவிரதை. நீண்ட புஜங்களையும், விசால மார்பையும், சிங்கம்போல நடையையும் உடையஸ்ரீராமருடைய மனைவி, மனித சிரேஷ்டரும், சிங்கத்துக்குச் சமானமா யுள்ளவருமான ஸ்ரீராமரை மணம் புரிந்த பதிவிரதையா யுள்ளவள். பூர்ண சந்திரனைப் போன்ற முகத்தை யுடையவரும், இந்திரியங்களை ஜயித்தவரும், பரந்த புகழை யுடையவரும், தைரியமுள்ளவருமான ஸ்ரீராமருடைய தேவியா யிருக்கிறவள். நான் மஹா பதிவிரதை. நரி சிங்கத்தின் மனைவியை இச்சித்தது போல நீ என்னைத் தொடவும் முடியாது. ஸ்ரீராமருடைய மனைவியாகிய என்னை விரும்புகிற மூடனாநீ இந்தச் சொர்ணவிருட்சத்தைஉனக்கு எதிரில் பார்க்கிறாய். மானானது தனக்கு எதிரியான சிங்கத்தினுடைய பல்லைப் பிடுங்க முயல்வது போலவும், விஷப் பாம்பினுடைய பல்லைப் பிடுங்க முயல்வது போலவும் ஸ்ரீராமர் பத்தினியான என்னை விரும்புகிறாய். நீ மந்தர பர்வதத்தைக் கையினால் கிண்டி யெடுக்க நினைக்கிறாய். காளகூட விஷத்தைப் பானம் பண்ணிவிட்டு க்ஷேமமா யிருக்க விரும்புகிறாய். ஸ்ரீராமருடைய பிரிய பத்தினியான என்னைக் கொண்டு போக விரும்புகி

ருய். உன் கண்களை ஊசியால் துடைத்துக் கொள்கிருய். கத்தியால் நாவை அறுத்துக்கொள்கிருய். கழுத்திலே பாறையைக்கட்டிக் கொண்டு சமுத்திரத்தைத் தாண்ட விரும்புகிறவனுகிருய். சூரிய சந்திரர்களைக் கைகளால் பற்றிக்கொள்ள விரும்புகிருய். நல்லொழுக்கமுள்ள ராமருடைய பிரிய பத்தினியான என்னை அபகரிக்க நினைத்து, எரிகிற நெருப்பை மடியில் கட்டிக்கொள்கிறவனுகிருய். இரும்புச் சூலத்தின் மேல் நடக்கக் கருதுகிறவனுகிருய். சிங்கத்துக்கும் நரிக்கும் சிற்ருற்றுக்கும், சமுத்திரத்துக்கும், அமிர்தத்துக்கும், கஞ்சிக்கும் யானைக்கும் பூனைக்கும், தங்கத்துக்கும் ஈயத்துக்கும் எத்தனை வித்தியாச மிருக்கிறதோ அத்தனை வித்தியாசம் உனக்கும்ஸ்ரீராமருக்கும் இருக்கிறது. கருடனுக்கும் காக்கைக்கும், நீர்க் காக்கைக்கும் மயிலுக்கும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும், சாரஸ பட்சிக்கும் கழுகுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் ஸ்ரீராமருக்கும் உனக்கும் இருக்கிறது. ஒரு வேளை நீ என்னைப் பலாத்காரமாக எடுத்துக்கொண்டு போனுலும் கூடத்தேவேந்திரனைப் போன்ற பராக்கிரம முடையஸ்ரீராமர் வில்லிலே அம்பை வைத்துக்கொண்டு நிற்கிறபோது கொசுகு வயிரக் குழம்பை விழுங்கித் தனக்குத் தானே அழிவைத் தேடிக்கொண்டது போல என்னை அபகரித்த நீ உன் பிராணனுக்கே அழிவைத் தேடிக்கொள்கிருய். இப்படியாகச் சீதை மஹா தைரியத்தோடு இராட்ச ராஜனுகிய இராவணனிடம் சொல்லிக் காற்றினுல் அசைக்கப்பட்ட வாழை மரத்தைப் போல நடுநடுங்கி நின்ருள். அப்படி நடுங்குகிற சீதையைப் பார்த்து இராவணன், எமனைப் போலப் பயங்கரமுள்ள அந்த இராவணன் சீதையைப் பயமுறுத்தக் கருதித், தன் குல கோத்திரங்களையும், பராக்கிரமத்தையும். சொல்ல ஆரம்பித்தான்.

## 48-ம் சருக்கம்.

இராவணன் தன் பராக்கிரமத்தைச் சொல்லுதல்.

1—19. சீதை இப்படிச் சொல்ல, இராவணன் கோபத்துடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு சீதையை நோக்கிக், கேட்கத்தகாத் வசனங்களைச் சொல்லுகிருன். புகழுள்ளவளே ! அழகான

முகத்தை யுடையவளே ! நான் குபேரனுக்கு மாற்றாந்தாய் புத்திரன். குபேரனுக்குத் தம்பி. இராவணன் என்ற பேருள்ளவன். உனக்கு மேன்மை யுண்டாகட்டும். நான் பத்துத் தலைகளை யுடையவன். எமனைக் கண்டு பயந்து ஜனங்கள் திக்குகள் தோறும் சிதறி ஓடுவது போலத் தேவகந்தர்வ பன்னகாதியர்கள் எனக்குப் பயந்து மூலைக்கு மூலை ஓடுவார்கள். முன் காலத்தில் குபேரன் ஒரு காரணத்தால் என்னுடன் சண்டை தொடுத்து என்னை வெல்ல முடியாமல் ஓடிப் போனான். அந்தக் குபேரன் எனக்குப் பயந்து சகல சம்பத்துக்களும் நிறைந்த தன் நகரமாகிய இலங்கையை விட்டுச் சிவன் வாசம் பண்ணுகிற கைலாச பர்வதத்தில் வசிக்கிறான். ஏ சுந்தரியே! நான் இப்போது ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறதும், நினைத்த விடத்துக்குப் போகக் கூடியதுமான இந்தப் புஷ்பகவிமானம், நான் என் பராக்கிரமத்தால் குபேரனை ஜயித்துப் பிடுங்கிக் கொண்டது. ஓ மைதுலீ! கோபத்தினால் என் கண்கள் சிவந்தால் யுத்தத்தில் வீரர்களான தேவர்கள் எல்லாரும் என் முகத்தைப் பார்த்ததும் ஓடிப் போவார்கள். வாயு தேவன் என்னைக் கண்டு பயந்து நான் இருக்கிற இடத்தில் வேகமாய் வீச மாட்டான். என்னிடத்திலிருக்கிற பயத்தினால் சூரியனும் வெப்பத்தை அடக்கிக்கொண்டு சந்திரனைப் போலிருப்பான். நானிருக்கிற இடத்தில் மரங்களும் அசையாமலிருக்கும். நதிகளும் வேகமாய் ஓடாது, மெதுவாய் ஓடும். என் மகிமைகளைச் சொன்னேன் என்னுடைய நகரம் எப்படிப்பட்டது என்றால், அந்தப் பட்டணத்தின் பேர் இலங்காபுரம் என்று கூறப்படும். சமுத்திர மத்தியில் இருக்கிறது. இந்திர நகரமான அமராவதி போல்வது. பயங்கரமான கொடிய அரக்கர்கள் சூழ்ந்து நின்று நாற் புறங்களிலும் காவல் செய்யப்படுவது. மஞ்சள் நிறமான மதிளால் சூழப்பட்டுள்ளது. உயர்ந்த தங்க மயமாயுள்ளது. வயிர மணிகளிழைத்த கோட்டை வாயிலை யுடையது. யானைகளும் குதிரைகளும் தேர்களும் நிறைந்திருக்கும். எப்போதும் மங்கள வாத்தியங்கள் கோஷித்துக்கொண்டிருக்கும். ரிது பேதங்களில்லாமல் எப்போதும் பூத்தும் காய்த்தும் பலங்களை யுடையதாயும் விளங்குகிற விருட்சங்களை யுடையதா யிருக்கும். நல்ல மனசை யுடையவளான இராஜபுத்திரீ ! அவ்விடத்தில் நீ என்னுடன் கூடி யிருந்தால், நீ இப்படி மானுஷ ஸ்திரீயாகக் காணப்பட மாட்டாய், உத்தம ஸ்திரீயே ! நீ

அவ்விடத்தில் என்னுடன் கூடி இந்த மனித லோகத்திலுள்ள சுகங்களையும், தேவலோக சுகங்களையும் அனுபவித்து, அற்பாயுசுள்ள மனிதனான இராமனை நினைக்க மாட்டாய். தசரதர் தன் பிரிய குமாரனுக்குப் பட்டத்தைக் கட்டிப், பராக்கிரமம் இல்லாதவன் என்று கருதியே மூத்த குமாரனான இராமனை வனத்துக்கு அனுப்பிவிட்டார். விசாலமான நேத்திர முள்ளவளே! இராஜ்யத்தை யிழந்தவனும், ஞான மில்லாதவனும், முனிவர் வேஷம் தரித்தவனும், ஈனனுமான இராமனால் உனக்கு என்ன சுகம் உண்டாகப் போகிறது? இராட்சதர்கள் எல்லாருக்கும் அரசனாகிய நான் மன்மத பாணங்களால் நொந்து, உன்னிடம் நானாகவே வந்திருக்கிறேன். ஆகையால் இப்படி என்னைத் தடுப்பது தகுதியல்ல. முன்காலத்தில் ஊர்வசி என்கிற அப்ஸரஸ் தன்னை விரும்பி வந்த புரூரவனைக் காலினால் உதைத்துத் தள்ளிப், பின் பரிதாபப்பட்டது போல, இராமரது பயத்தினால் என்னை நிராகரித்து விட்டுப் பிறகு வருத்தப்படுவாய், உத்தமமானவளே! மனிதனாகிய இராமன் யுத்தத்துக்கு வந்தால் என்னுடைய விரலுக்குக்கூட ஆற்றமாட்டான். சீதா! நீ இராமனுக்குப் பயப்படாதே. உன் அதிர்ஷ்ட வசத்தினாலேதான் நான் உன்னிடம் வந்தேன். நீ என்னிடம் வந்துவிடு என்று இராவணன் சொன்னான்.

20—24. இராவணன் இவ்வாறு கூறக் கேட்ட சீதை மிகவும் கோபங்கொண்டு கண்கள் சிவந்து அவனைப் பார்த்துக் கொடிய வார்த்தைகளால் பதில் கூறுகிறாள். சகல லோகங்களுக்கும் பிரபுவான குபேரனை உன் தமையனென்று சொல்லிக்கொண்டு, இந்த அக்கிரமமான காரியத்தைச் செய்யத் துணிகிறாய். இராவணா! கெட்டபுத்தி யுள்ளவனும், புலனடக்க மில்லாதவனும், கொடியனுமாகிய உன்னை அரசனாகக் கொண்டிருக்கிறஅரக்கர்கள் எல்லாரும் தப்பாமல் மடிவார்கள். ஒப்பற்ற அழகினையுடைய வஜ்ரதரனான தேவேந்திரனுடைய பத்தினி சசியை அபகரித்துக் கொண்டவன் ஜீவனுடன் இருப்பதா யிருந்தாலும் ஸ்ரீராமருடைய பத்தினியை அபகரித்தவன் பிழைத்திருக்க மாட்டான். என்னை அவமதித்தவன் அமிர்தம் உண்டவனானாலும் மரணத்துக்குத் தப்பமாட்டான்.

---

## 49-ம சருக்கம்.

சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போகிறது.

1—4. பெருமையுள்ள இராவணன் சீதை சொன்னதைக் கேட்டு, இராவணன் கையின்மேல் கையால் அறைந்து, பெரிய சொரூபத்தை அடைந்து, சீதையைப் பார்த்து மறுபடியும் கொடும் சொற்களால் பேசுகிறுன். பைத்தியம் பிடித்தவளே! நீ என் பராக்கிரமத்தையும் பெருமையையும் கேட்டிருக்க மாட்டாய் போலிருக்கிறது. நான் வானத்தில் நின்றுகொண்டு என் கைகளால் பூமியை மேலே தூக்கி யெடுப்பேன். சமுத்திரம் முழுவதையும் குடிப்பேன். யுத்தகளத்தில்வந்தால் எமனைக் கூடக் கொல்வேன். கூரிய பாணங்களை யெய்து சூரியனையும் துளைத்துவிடுவேன். பூமியைப் பிளந்துவிடுவேன். பைத்தியக்காரீ நினைத்த வடிவத்தை எடுத்துக்கொள்ளக் கூடியவனான என்னை உன் கணவனுகப் பார் என்று சொன்னுன்.

5—10. இப்படிச் சொன்னதும் கோபத்தினுல் அவனுடைய கண்கள் சூரியாக்கினிகளைப் போலச் சிவந்தன. நடுசிவந்தும் சுற்றிலும் பசிய நிறமுடையவைகளாயின. இராவணன் தான் கொண்டிருந்த சந்நியாசி வேஷத்தை ஒழித்துவிட்டு, எமனைப் போன்ற சுயரூபத்தை யெடுத்துக்கொண்டான். அப்போது இராவணன் அழகுள்ளவனும் கரிய மேகம் போன்ற வடிவுள்ளவனும், பத்துத் தலைகளுள்ளவனும் வில் அம்புகளை யுடையவனுமாய்த் தோன்றிக் கோபமிகுந்தவனுமானுன். கண்கள் இரண்டும் இரத்தம்போலச் செவந்தன. பெரிய வடிவமுள்ள இராவணன் தன்னுடைய கபடரூபத்தை விட்டு நிஜ சொரூபத்தை யெடுத்துக்கொண்டு செவந்த கண்களும், கறுத்த மேனியும் உடையவனுனன். இப்படிப்பட்ட சொரூபத்தை யுடையவனுய் உத்தமியான சீதைக்கு எதிரில் நின்றுன்.

11—15. இராவணன் நின்றுகொண்டு, உயர்ந்த வஸ்திராபரணங்களை யுடையவனுய்ச் சீதையைப் பார்த்து, சிறந்த கீர்த்தியுள்ளவளே மூன்று லோகங்களிலும் கீர்த்திபெற்ற நாயகனை அடைய விரும்பினுல் என்னிடம் வா, நான் உனக்குத் தகுந்த கணவன். மங்களமானவளே? நீ நெடுங்காலம் என்னைக் கணவனுக அடைந்து வாழ். நான் கொண்டாடத் தகுந்த கணவன், நீ

என்னை மணந்தால், நான் உனக்கு ஒரு நாளும் கெடுதி செய்யவே மாட்டேன். மனிதனாகிய இராமனிடத்திலுள்ள பிரியத்தை விட்டு விடு. என்னிடத்தில் பிரியம் வை. உனக்கு ஒன்றுந் தெரியாமலிருந்தும் எல்லாம் தெரிந்தவளைப் போல நினைத்துக்கொண்டிருக்கிறாய். நீ அறிவில்லாதவள். இராஜ்யத்தை யிழந்து காரிய சித்திகளு மற்றவனும், அற்ப ஆயுசுள்ளவனுமான இராமனிடத்திலே சகல சற்குணங்களும் இருக்கிறதாக எண்ணி அவனிடத்தில் பிரியம் வைத்திருக்கிறாய். அந்தப் புத்திகெட்ட இராமன் ஒரு பெண் பேச்சைக் கேட்டு, இராஜ்யத்தையும் நண்பர்களையும் விட்டு, துஷ்டமிருகங்கள் வசிக்கிற இந்த வனத்தில் வந்திருக்கிறான். அவனிடத்திலுள்ள ஆசையை ஒழித்துவிடு என்றான்.

12—22. மதுரமானவைகளைப் பேசத் தக்கவளும், இனிமையாய்ப் பேசுகிறவளுமான சீதையினிடத்தில் இப்படிச் சொல்லி, மிகுதியும் துர்ப்புத்தியுள்ள இராவணன் காமாவேசத்தினால் மெய் மறந்து, சீதையின் கிட்டப் போய், ஆகாசத்தில் புதன் ரோகிணியைப் பிடித்துக் கொண்டது போல அவளைப் பிடித்துக்கொண்டான். இடது கையினால் அவளது கூந்தலைப் பிடித்துக்கொண்டான். வலது கையால் அவளுடைய தொடையைப் பிடித்துக்கொண்டான். எமனைப் போன்றவனும், பத்துத் தலைகள் உள்ளவனும், நீண்ட கைகளை உடையவனும், மலை போன்றவனுமான இராவணனுடைய கொடுஞ் செய்கைகளைப் பார்த்து அங்குள்ள வனதேவதைகள் பயந்து நடுங்கி அவ்விடத்தை விட்டு ஓடிப்போனார்கள். மாயைகளுள்ளதும், திவ்வியமானதும், கழுதைகள் கட்டப்பட்டதும். உக்கிரமான சத்தமுள்ளதும், பொன் சக்கரமுள்ளதுமான இராவணனுடைய பெரியதேர் அவன்கிட்ட வந்துநின்றது. பெரிய தொனியோடு கடின வார்த்தைகளைச் சொல்லிச் சீதையை அந்தத் தேரில் உட்காரவைத்தான். பதிவிரதையென்று பிரசித்திபெற்ற சீதை அப்படித் தேரின்மேல் வைக்கப்பட்டபோது, இரைந்து அழுதுகொண்டு, வனத்துக்குப் போயிருக்கிற இராமரை நோக்கி இராமா, இராமா ! என்று கூப்பிட்டுக் கதறி அழுதாள். தன்னிடத்தில் பிரியமில்லாமலிருக்கிறவளும் நாக கன்னிகையைப் போன்று கதறிப் புரளுகிறவளுமான சீதையைத் தேரில் வைத்துக்கொண்டு ஆகாயத்தின் மேலே கிளம்பிப் போனான்.

23—40. அப்படிச் சீதையை இராவணன் பலாத்காரமாகக் கொண்டுபோகிற போது, சீதை மதுபானம் செய்து புத்தி மயங்கினவர்களைப் போலவும், பைத்தியம் பிடித்தவர்களைப் போலவும், மிக வருந்திக் கதறி யிரைந்து அலறி அழத் தொடங்கினள். பெருந் தன்மையுள்ள மனசையும் நீண்ட கைகளையும் உடைய இலட்சுமணா! துஷ்டனாகிய இந்த இராவணன் என்னை எடுத்துக் கொண்டு போகிறான். உனக்குப் பலமில்லையா? தர்ம நிமித்தமாகப் பிராணனையும், சுகத்தையும், தனத்தையும் விடத் தக்கவரான இராமா! இராவணன் அந்நியாயமாக என்னை எடுத்துக் கொண்டு போகிறானே? நீர் ஏன் பாராமலிருக்கிறீர்? சத்துருக்களைச் சங்கரிக்கிற இராமா! நீர் துஷ்டநிக்கிரகம் செய்கிறவரென்று கீர்த்தி பெற்றவர் அல்லவா? அப்படி யிருக்கையில் இந்தப் பாபாத்மாவான இராவணனை யேன் சிட்சிக்காம லிருக்கிறீர்? என்று இராம இலட்சுமணர்களைக் கூப்பிட்டு, உலகத்தில் கெடுதியான செய்கைகளுக்கு உடனே பலன் கிடைக்க வேண்டும். பயிர் பழுக்கிறதற்குக் காலவரையறை யுண்டா யிருப்பது போலிருக்கிறது. ஏ இராவணா? நீ எமனிடத்தில் அகப்பட்டுக் கொண்டவனாதலால் இந்த காரியத்துக்கு ஏற்பட்டாய். பிராணாபத்துக்குமூலமான இக்காரியத்தைச்செய்து இராமனால் அழிவை அடைவாய் என்று இராவணனை நிந்தித்து தர்மாத்மாவும் கீர்த்திவந்தருமான ஸ்ரீராமருடைய பத்தினியும் பதிவிரதையுமான என்னைத் துஷ்டனாகிய இராவணன் தூக்கிக் கொண்டு போகிறான்? ஆகையால் கைகேசி தன் பந்துக்களுடன் கூடி இப்போது தன் விருப்பம் நிறைவேறினவளாவாள். ஆகா! என்ன ஆச்சரியம்? என்று கைகேசியை நிந்தித்து, வன விருட்சங்களே? நான் போகிறேன். என்னை இராவணன் எடுத்துக்கொண்டு போகிறான் என்று ஸ்ரீராமர் வரும்போது சொல்லுங்கள் என்று சொல்லிப் பின், மலைகளே? உங்களை நமஸ்கரிக்கிறேன். இராவணன் தூக்கிக்கொண்டு போகிறானென்று ஸ்ரீராமரிடம் சொல்லுங்கள் பெரிய சப்தத்தை யுடைய கோதாவரி நதியே உனக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன், ஸ்ரீராமர் வந்தவுடனே இராவணன் சீதையைக் கொண்டுபோகிறா னென்று அவரிடம் சொல்லு அநேக விருட்சங்களை உடைய வனதேவதைகளே? உங்கள் எல்லாரையும் வணங்குகிறேன் இராவணன் என்னை யெடுத்துக்கொண்டு போகிறானென்று நீங்கள் எல்லாரும் ஸ்ரீராமரிடம் சொல்லுங்கள். இந்த வனத்திலிரு

க்கிற மிருகங்களே? பட்சிகளே? உங்கள் எல்லாருக்கும் வணங்குகிறேன். நீங்கள் எல்லாரும் ஸ்ரீராமரிடத்தில் உமது பிராண நாயகியான சீதையை இராவணன் பலாத்காரமாகக் கொண்டுபோகிறுன் என்று சொல்லுங்கள். எமன் என்னைப் பலாத்காரமாகக் கொண்டு போனாலும், நீண்ட கைகளையுடைய ஸ்ரீராமர் தமது சாமர்த்தியத்தால் மீட்டுக்கொண்டு வருவார். என்றிப்படிப் பல வகையாக பல பேச்சுகளைப் பேசிக்கொண்டு பரந்த கண்களையுடைய சீதை விசனத்துடன் கூறுகையில் ஒரு பெரிய விருட்சத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற ஜடாயுவைக் கண்டாள். இராவணன் கையில் அகப்பட்டுகொண்டிருக்கிற அந்தச் சீதை பயத்துடன் ஜடாயுவைப் பார்த்து ஜடாயுவே? பாவகாரியங்களைச் செய்கிற இந்த இராவணன் என்னைத் திக்கில்லாதவள் போல தூக்கிக் கொண்டு போகிறுன் பாரும் இவன் பலவான்? ஜயசீலன்? ஆயுதங்களை யுடையவன். அறிவில்லாதவன்? இரக்கமில்லாதவன். இவனோடு யுத்தம் செய்ய உனக்குப் பலமில்லை. இராம இலட்சுமணர்கள் வந்தவுடனே இங்கே நடந்தவைகள் எல்லாவற்றையும் நடந்தபடி சொல்லு என்று ஜடாயுவுக்குச் சீதை சொன்னுள்.

---

## 50-வது சருக்கம்.

### ஜடாயு இராவணனை யெதிர்ப்பது.

1—2. அந்த ஒரு பெரிய மரத்தின் கிளையில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்த ஜடாயு.சீதையின் அழுகையைக் கேட்டுத், திடீரென்று எழுந்திருந்து, இராவணனைப் பார்த்து, அதன் பின் அவன் தேரின்மேல் உட்கார்ந்திருக்கிற சீதையையும் பார்த்தான். மலைச் சிகரம் போன்றவனும், கூரிய மூக்கை யுடையவனும், காந்தியுள்ளவனுமான பட்சி ராஜனுகிய ஜடாயு மரத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு இராவணனிடத்தில் சரியான வசனங்காளால் சொல்லுகிறுர்.

3—28. பத்துத் தலைகளை யுடையவனே! நான் பெரியவர்கள் செய்கைகளை அனுசரிக்கிறவன். சொன்ன வார்த்தை தவருதவன். மிகப் பல முடையவன். கழுகுகளுக்கு அரசன். என்

பேர் ஜடாயு என்று சொல்வார்கள். தசரத புத்திரரான ஸ்ரீராமர் உலகங்களுக்கு எல்லாம் பிரபுவானவர். தேவேந்திரனுக்கும் வருணனுக்கும் சமானமானவர். ஜனங்களுக்கு நன்மை செய்வதிலேயே பிரியமுடையவர். நீ தூக்கிக் கொண்டுபோக விரும்பின இந்த உத்தமியான சீதை லோக நாயகரான அந்த ஸ்ரீராமருடைய தர்ம பத்தினி. மஹா பதிவிரதை யென்று புகழ் பெற்றவள். வீரமுள்ளவனே! நீயும் குடிகளைப் பரிபாலிக்கிற அரசனா யிருக்கிறாய். நீதியாய்ப் பரிபாலனம்பண்ணுகிற அரசனா யிருக்கிறவன் ஸ்திரீகளைத் தொடலாமா? பராக்கிரமசாலியே! உன்னைப் போல் ஒத்தவன் முக்கியமாய் இராஜஸ்திரீகளைக் காப்பாற்ற வேண்டும். அப்படி யிருப்பதினாலே நீ இப்படிப்பட்ட அக்கிரமமான காரியம் பண்ணலாமா? அந்நிய ஸ்திரீயைத் தொடுவது கெட்ட காரியமாதலால் இந்த நீச புத்தியை மறந்து விடு. மற்றவர்கள் நிந்திக்கும்படியான துஷ்கிருத்தியத்தை எப்போதும் செய்யக் கூடாது. தன் பத்தினியை எப்படிப் பிறர் தொடக் கூடாதோ அப்படியே பரஸ்திரீகளுமென்று கருதி அவர்களைத் தொடக் கூடாது. புலஸ்திய குமாரனே! யோக்கியரா யிருப்பவர்கள் சாஸ்திரத்துக்கு விரோதமான தர்மத்தையாவது செய்ய விரும்ப மாட்டார்கள். ஆகையினாலேதான் சொந்த கிருத்தியங்களை விடக் கூடாது. அரசனானவன் தர்மார்த்தகாமங்களாகிய புருஷார்த்தங்களுக்கு இருப்பிடமாயுள்ளவன். இராஜாக்கள் நல்ல தர்மங்களை ஆசரித்தால் ஜனங்களும் அந்த தர்மத்தையே அனுஷ்டிப்பார்கள். அரசன் பாப காரியத்தைச் செய்தால் ஜனங்களும் அந்தப் பாப கர்மத்தையே செய்வார்கள். தர்மமும் அதர்மமும் இராஜாவினிடத்திலேயே உள்ளன. இராட்சதோத்தமனே! நீ பாபகுணமுள்ளவன். நிலையில்லாதவன். இப்படிப்பட்ட பாபாத்மாவான நீ தேவர்களுக்குரிய தெய்வவிமானத்தை எப்படி அடைந்தாய்! ஏ இராவணா! பிறக்கும்போது எவனுக்கு எந்த குண மிருக்கிறதோ அந்தக் குணம் ஒருபோதும் நீங்குவதில்லை. பாபாத்மாக்கள் வீட்டில் ஐசுவரியம் எப்போது மிருப்பதில்லை. ஆகையால் நீ சீக்கிரத்தில் கெட்டுப்போவாய். வீரரும் தர்ம சீலருமான ஸ்ரீராமர் எப்போதாயினும் உனக்காவது, உன்தேசத்துக்காவது, நகரத்துக்காவது கெடுதிசெய்து இருக்கிறாரா? குற்றமற்றவரான அந்த ஸ்ரீராமருக்கு நீயேன் கெடுதி செய்கிறாய்? சூர்ப்பணகையின் காதை

யும் மூக்கையும் அறுக்கவில்லையா? கரதூஷணர்களைக் கொல்லவில்லையா என்றால், சூர்ப்பணகையின் துர்ச்செய்கையினால் அவளைச் சிட்சித்தார். அந்தச் சூர்ப்பணகைக்காக ஜனஸ்தானத்தில் வசித்த கரன் ஸ்ரீராமரை யெதிர்த்து வந்தபடியால் ஒத்தாசை வேண்டாத வீரரான ஸ்ரீராமர் கரனையுங் கொன்றார். இந்த விஷயத்தில் ஸ்ரீராமர்மேல் என்ன தப்பிதம் இருக்கிறது? யோசித்து உண்மையைத் தெரிந்துகொள். லோகநாயகரான ஸ்ரீராமருடைய பத்தினியை அபகரிப்பது உனக்கு நியாயமில்லை. இந்திரனுடைய ஆயுதமானது விருத்திராசுரனைக் கொன்றாற்போல் ஸ்ரீராமர் அக்கினி மயமான தம்முடைய கண்களால் உன்னைத் தகிக்கும்படி பார்ப்பார். உன்னைச் சாம்பலாக்கி விடுவார். கொடிய விஷமுள்ள சர்ப்பத்தை மடியில் கட்டிக்கொண்டிருக்கிறாய். இதை நீ அறியவில்லை. எமபாசம் உன் கழுத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறதை நீ அறியாம லிருக்கிறாய். மனிதர்கள் தம் தலை யிற்றுப்போகிற வரைக்கும் பாரம் தோன்றுகிறதில்லை. வியாதி யுண்டாக்காமலிருக்கிற ஜீரண பதார்த்தங்களை புசிக்க வேண்டும். எந்தக் காரியம் புண்ணியமில்லையோ, புகழ் அல்லது மகிமையுண்டாகாதோ அந்தக் காரியத்தைச் செய்வதனால் சரீரப் பிரயாசமேயன்றிப் பலனில்லை. அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக் கூடாது. ஓ இராவணா! நான் பிறந்து எனக்கு வம்ச பரம்பரையாய் இராஜ்யத்தை ஒழுங்காக ஆண்டு கொண்டு வருகிறேன். எனக்கு அறுபதினாயிரம் வயது ஆயிற்று. நான் கிழவன். நீ பருவமுள்ளவன்; வில் வீரன்; அம்புகளைத் தரித்தவன்; போர்க்கோலம் தரித்தவன். தேர்மேல் உட்கார்ந்திருக்கிறாய். அப்படி யிருந்தாலும் நீ சீதையைத் தூக்கிக்கொண்டு க்ஷேமமாய்ப் போகமாட்டாய். ஊகத்தினால் தோன்றுகிற காரணங்களைக் கொண்டு சத்தியமான வேதார்த்தத்தை எப்படி அழிக்க முடியாதோ அதுபோல நான் பார்த்துக் கொண்டிருக்கிறபோது இந்தச் சீதையை பலாத்காரமாகக் கொண்டு போக முடியாது. இராவணா! நீ வீரனாயிருந்தால், க்ஷண நேரம் நின்று சண்டை செய். முன்னாலே கரன் ஸ்ரீராமனால் சங்கரிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தாற் போல நீயும் என்னால் கொல்லப்பட்டுப் பூமியில் விழுவாய். மரவுரி யணிந்திருக்கிற ஸ்ரீராமர் சீக்கிரத்தில் உன்னை யுத்தத்தில் சங்கரிப்பார். அவர் முன்னால் எத்தனையோ தைத்தியர், தானவர்களில் பலத்திற் சிறந்தவர்களைச் சங்கரித்திருக்கிறார். இராஜபுத்திரர்களான

உ

# ஸ்ரீ மஹாபாரதம்

## தமிழ் வசன காவியம்.

இகபரமிரண்டுக்கும் சாதகமாயுள்ள நூல்களில் மஹாபாரதம் போலச் சிறந்தநூல் கிடையாது என்பது நமது தேசத்தில் எல்லாரும் அறிந்தவிஷயமே. இதனை வியாசமஹாரிஷியானவர் ஸம்ஸ்கிருதபாஷையில் அதி அற்புதமாகச் செய்துள்ளார் தெலுங்கு முதலிய பாஷையில் அந்தந்த பாஷா பண்டிதர்களால் மொழிபெயர்க்கப்பட்டுமிருக்கின்றது. தமிழில் பெருந்தேவனார் வில்லிப்புத்தூரர், நல்லையபிள்ளை முதலியவர்களால் செய்யுள்களாக இயற்றப்பட்டுள்ளது. வில்லிப்புத்தூரர் நல்லாப்பிள்ளை இருவருமு மியற்றப்பட்ட பாரதம் வசனமாக எழுதப்பட்டிருக்கின்றது. ஆயினும் அது ஸம்ஸ்கிருத பாரதத்தோடு அநேக விடங்களில் மாறுபடுகின்றது. ஆதலால் வியாசர்கூறிய பாரதசரித்திரத்தை உள்ளபடி அறிந்து கொள்வது சாத்தியமாகாதென்பது கருதி உண்மையான சரித்திரத்தை யாவரும் படித்தறிந்து கொள்ளும் பொருட்டு ஸம்ஸ்கிருதத்திலுள்ள மஹாபாரதத்தை யனுசரித்து வசனமாகவெழுதி வெளியிடப்படுகிறது.

இது பெரிய நூலாகையால் அதிக விலைகொடுத்து வாங்கும் கஷ்டத்தை நீக்கும்பொருட்டு சஞ்சிகையாக வெளியிடப்படுகிறது.

டிம்மி 32 பக்கங்கொண்ட நாலுபாரமுள்ள சஞ்சிகை ஒன்றுக்கு அணா 0-2-0. ஆகையால் மதாபிமானமுள்ள புண்ய புருஷர்கள் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து உபகாரஞ்செய்து எங்களுடைய காரியத்தை நிறைவேற்றிவைக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஸம்ஸ்கிருத மஹாபாரதத்தை அனுசரித்துச் சிறிது கற்றவரும் ஸ்திரீகள் முதலானவர்களும் படித்து அறிந்துகொள்ளும்படி தமிழில் வசனமாக எளியநடையில் எழுதப்பட்டு வருகிறது.

மஹாபாரதம் மாதம் இரண்டு சஞ்சிகை வெளிப்படும். வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

☞ எல். வி. இராமசந்திர அய்யர்,

மானேஜர், ஓரியண்டல் பிரஸ்.

நெ. 35, லிங்கிசெட்டி தெ[illegible] மதராஸ்.